Registered as a Newspaper in Ceylon ★ ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 (16-10-66) இதழ் 246
பராபவ புரட்டாதி 30 ஜமா றஜப் 1 ஞாயிற்றுக்கிழமை

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14, டாம் வீதி கொழும்பு

## இரு அமெரிக்கர் ரஷயாவில் கைது

மாஸ்கோ, அக். 15

தாங்கள் தங்கியிருந்த லெனின்கிராட் ஹோட்டல் ஒன்றிலிருந்த வெண்கலக் கரடிச்சிலையொன்றைச் களவாடிய குற்றத்தின் பேரில், ரஷ்யா இரு அமெரிக்க உல்லாசப் பிரயாணிகளைத் தடுத்து நிறுத்தியுள்ளது என அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

(பி டி ஸி.)

# பங்கீட்டு முறையில் பால் உணவுப் பொருள்

## தட்டுப்பாட்டை சமாளிக்க அரசாங்கம் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஞாயிறு

பால் உணவுப் பொருள்களையும் பங்கீட்டு முறையில் விநியோகிப்பதுபற்றி அரசாங்கம் ஆலோசனை செய்துவருகிறது. குழந்தைகள், அசக்தர்களுக்கான முக்கிய உணவுச் சத்தாக விளங்கும் பால் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பால் உணவுப் பொருள்களையும் பங்கீட்டு முறையில் விற்பனைசெய்யவேண்டிய அவசியமேற்பட்டுள்ளத[illegible] அரசாங்கம் கருதுகிறது.

சில ரக ஜவுளிகள் பங்கீட்டு முறையில் விநியோகிக்கப்படுவதுபோல சிலரக பால் உணவுகளுக்கும் பங்கீட்டுமுறை ஏற்படுத்துவது பற்றி அரசாங்கம் ஆலோசனைசெய்துவருகிறது. இது பற்றி மாவட்ட அரசாங்க அதிபர்களினதும் மக்கள் சபைகளினதும் கருத்தும் கோரப்பட்டுள்ளது.

பால்உணவுப் பொருள்களின் இறக்குமதிக்கு செலாவணி அனுமதிக்கப்படாததே பால், உணவுப் பொருள் தட்டுப்பாட்டுக்கு காரணமெனத் தெரிகிறது.

—

## 'இலங்கையில் தேசிய ஐக்கியம் நிலைத்துவிட்டது

### திருநெல்வேலி தமிழ் விழாவில் புத்த பிக்கு

திருநெல்வேலி, சனி

"1958-ம் ஆண்டு இலங்கையில்நடைபெற்ற இனக் கலவரத்தை இந்தக்கட்டத்தில் நினைக்கும்போது எனக்குஆச்சரியமாகவிருக்கிறது. இங்கு என்னை அழைத்துக் கௌரவிப்பது இலங்கையில்தேசியஐக்கிய நிலைத்துவிட்டது என்பதைக் காட்டுவதாகும். உலகவரலாற்றிலேயே ஒருபுத்த சமயக் குருவை அழைத்து ஒருதமிழ் விழாவுக்கு தலைமைதாங்க வைத்தபெருமை இந்தஇயக்கத்தையேசார்ந்துவிட்டது. இந்தச்சம்பவம் என்வாழ்க்கையிலேயே என்னுல்மறக்க முடியாதஒன்றாகும். இந்தச் சந்தர்ப்பத்தை எனக்கு அளித்து பௌத்த மக்களைக் கௌரவித்தமைக்காகஇந்து இளைஞர் இயக்கத்தாருக்கு எனதுநன்றிகளை பௌத்த மதமக்களின்சார்பில் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.'

மேற்கண்டவாறு திருநெல்வேலி கிழக்கு இந்து இளைஞர் இயக்கத்தினரால் இம்மாதம்12-ம்,13-ம்திகதிகளில் கொண்டாடப்பட்ட நான்காவதுமுத்தமிழ் விழாவின் இரண்டாம்நாள் நிகழ்ச்சிகளை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்துப்பேசுகையில் யாழ்ப்பாணம் நாகவிகாரைப் பிரதம குரு வண. நந்தாராமநாயக்க

(5-ம்பக்கம் பார்க்க)

## தேசிய மாணவர் அணிவகுப்பு புதுடில்லியில் நடைபெறும்

புதுடில்லி, அக். 15

புதுடில்லியில் 'தேசிய மாணவர்அணிவகுப்புஒன்று நவம்பர் 18-ந் திகதியன்று நடாத்தத்திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த இருநாட்களுக்கும்இவ்வணிவகுப்பைத் தொடர்ந்து மாணவர் மாநாடு ஒன்று நடைபெறுமெனவும் தெரிகிறது.

இவ்வணிவகுப்பில் ஒரு லட்சம் மாணவர்கள் பங்குபற்றுவரெனவும், தற்போதைய மாணவர் கிளர்ச்சிக்குக் காரணமான குறைபாடுகளை நீக்குவதற்கான வழிவகைகளை மாணவர்மாநாடு ஆராயுமெனவும் சம்யுக்த சோஷலிஸ்ட்கட்சியின்பாராளுமன்றச் சபையின்தலைவர் திரு மாது லிமாயே பத்திரிகையாளர். மாநாடொன்றில் தெரிவித்துள்ளார்.

தேசிய அணிவகுப்பு மாநாட்டுக்கான தயாரிப்புக் கூட்டமொன்று புதுடில்லியில் இம்மாதம் 29, 30ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது.

மாணவர்களிடையே பலாத்காரத்தைத் தாம் விரும்பவில்லையாலும், மாணவரின் அமைதியின்மைக்கு அரசாங்கமேகாரணமெனத்தாம் கருதுவதாக திரு. லிமாயே கூறினர்.

மாணவர் அணிவகுப்புத் தினமாகிய நவம்பர் 18-ல்; மாணவர்கள் தமது கோரிக்கைகளடங்கிய மகஜர் ஒன்றைப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியிடம் சமர்ப்பிப்பார்.

## மீனவர்கள் வசிக்க இடம்: கடற்றொழில் கூட்டுத்தாபனம் கொண்டுவரும் குடியேற்றத் திட்டம்

கொழும்பு, சனி

கடற்றொழில் கூட்டுத்தாபனம் கரையோரப் பகுதிகளில் மீனவர்களுக்கான200 குடியேற்றத் திட்டங்களை அமைக்கவிருக்கின்றது. கடற்றொழில் கூட்டுஸ்தாபனத்தலைவர் திரு.கே. எம். பி, ராஜரத்ன இதுசம்பந்தமாக கரையோரப் பகுதிகளிலுள்ளதொகுதிஎம்பிக்களுடன்பேச்சுவார்த்தைநடத்துவதற்காக அவர்களை அழைத்துள்ளார்

வதிய இடமில்லாமல் கஷ்டப்படும்மீனவர்கள் இந்தத் திட்டத்தில் பயனடைவர். இந்தத்திட்டத்தைத் தொடர்ந்து மீனவர் [illegible] பத்தின் குறைபாடுகள்படிப்படியாகக் கவனிக்கப் படவிருக்கிறது. மீன் விநியோகத்தை அதிகரிக்கவும் இத் [illegible]

## 'திரு'வின் மகன் வெற்றி

கொழும்பு, சனி

கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற்ற சிறந்த பேச்சாளர்களுக்கான பேச்சுப்போட்டியில் செல்வன் வாசுதேவன் திருச்செல்வம் முதல் இடத்தைப்பெற்றுள்ளார். இவர் உள்ளூராட்சி மந்திரி செனட்டர் திருச்செல்வம் கியூ. ஸி. யின் புத்திரர். இந்தப் பேச்சுப்போட்டிக்கு திரு. பண்டிட் டி. சொய்ஸா நடுவராக விளங்கினர். 'பலமே ஜெயம்' என்ற தலைப்பில் செல்வன் வாசுதேவன் பேசினர். கருத்துச்செறிவுள்ளதாக அவருடைய பேச்சு இருந்ததென பலரும் பாராட்டினர்.

## பல்கலைக் கழகங்களில் மாணவர்களின் 'சேஷ்டை

### ஒழித்துக்கட்ட மந்திரி உத்தரவு

கொழும்பு, சனி

பல்கலைக்கழக போதனாசிரியர்கள் கோஷ்டிகள் அமைத்துக்கொள்ளும் பழக்கத்தை ஒழித்துக்கட்டும்படி பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு கல்வி மந்திரி உத்தரவிட்டுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையில் நடைபெறும் 'சேஷ்டை'களை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும் மந்திரி பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மாணவர்கள் நடத்தும் 'சேஷ்டை'களைப் பொறுத்துக் கொண்டிருக்கமுடியாது. சிரேஷ்ட மாணவர்கள் புதிய மாணவர்களை 'சேஷ்டை' செய்து கேலி செய்வது அருவருப்பான விஷயம் என்று மந்திரி குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் சமீபத்தில் பேராதனைப் பல்கலைக்கழக வைத்திய பிரிவில் இடம்பெற்ற 'சேஷ்டை'கள் சம்பந்தமாக நடைபெற்றுள்ள விசாரணைகளில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது. இவர்கள் உபவேந்தரின் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு தண்டிக்கப்படுவர் என்று தெரிகின்றது.

## துணுக்காய் வாசி கைது

### 'மந்திரிக்கு எம்.பி. புகார்'

கிளிநொச்சி, ஞாயிறு

சட்டவிரோத குடியேற்றக்காரரென சந்தேகத்தின் மீது துணுக்காயை சேர்ந்த எம். முனியாண்டி என்பவரை, சட்டவிரோத குடியேற்ற தடுப்பு இலாகா பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைதுசெய்து கொம்பனித்தெரு முகாமிற்கு அனுப்பியுள்ளனர்.

இதுசம்மந்தமாக துணுக்காய் காரியாதிகாரி கந்தோரில் ஒரு பகிரங்க விசாரணை நடைபெற்றபோது, முனியாண்டி 1948-ம் ஆண்டுக்குமுன் இலங்கைக்கு வந்ததற்குரிய தஸ்தாவேஜுக்கள்அத்தாட்சிகாட்டப்பட்டதாகஅறியப்படுகிறது.

இதைத் தொடர்ந்து முனியாண்டியின் மனைவி செய்த முறைப்பாட்டின் விளைவாக, கிளிநொச்சி எம். பி. திரு. கே. பி. இரத்தினம், ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு தக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டியுள்ளார்.

முனியாண்டியிடம் ஒருவர் சென்று உன்னை இரகசிய பொலிஸார் தேடுவதாகவும், பணம் கொடுத்தால் அவரை வழிக்கு கொண்டு

(5-ம் பக்கம் பார்க்க)



தராதரம் பெற்ற
கண் பரிசோதகர்
அனஸ்கோ,
12, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.
(நூதனசாலைக்கு முன்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தாய்மொழியிலேயே கல்வி கற்பிக்கவேண்டும்'

—பருத்தித்துறை எம். பி.

## வல்வெட்டித்துறை மக்களின் முன்மாதிரிக்கு டாக்டர் குருகே பாராட்டு

### சிதம்பராக்கல்லூரி புதியமாடிக்கட்டிட திறப்பு விழா

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் புதிய இரு மாடிக் கட்டிடத்தைக் கல்வியமைச்சின் சிரேஷ்ட உதவிக்காரியதரிசி டாக்டர் ஆனந்த குருகே நேற்று மாலை 6 மணிக்குச் சம்பிரதாய முறைப்படி திறந்துவைத்தார்.

பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், யாழ். அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா, பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. வி. எம். குமாரசாமி, வல்வை பட்டினசபைத் தலைவர் திரு. வி. இரத்தினவடிவேலு பருத்தித்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. என். நடராசா, முன்னாள் உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரம். வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம், வடமராட்சிக் காரியாதிகாரி திரு. ஏ. ஜி. விசுவநாதன், ஊர்காவற்றுறை காரியாதிகாரி திரு. சுப்பிரமணியம், வல்வை வைத்திய அதிகாரி திரு. எஸ். பாலகிருஷ்ணன் மற்றும் பல பிரமுகர்களும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

ஆனந்த குருகே கல்லூரி வாசலில்வைத்து கல்லூரி அதிபரால் மாலையணிவித்து வரவேற்கப்பட்டார். கல்லூரியின் கொடியும் ஏற்றி வைக்கப்பட்டது.

இதன் பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

"மாணவர்கள் கல்வி கற்பதில் கஷ்டப்படக்கூடாது என்னும் பெருநோக்குடன் இக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது. திரு. கே. சிதம்பரப்பிள்ளை தான் கல்வி கற்கும் காலத்தில் அனுபவித்த கஷ்டங்களை வருங்காலச் சந்ததியினரான வல்வெட்டித்துறை மக்கள் அடையக்கூடாதென்ற மன எண்ணத்துடன்தான் இக்கல்லூரியை ஸ்தாபித்தார். அவரைத் தொடர்ந்து அவரின் மைத்துனரான திரு. ஞா. தையல்பாகர் இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைத்து வந்தார். அவர் இக்கல்லூரியை அரசாங்கத்திடம் கையளிக்கும்வரை இதன் வளர்ச்சிக்காகவே உழைத்து வந்தார். இன்றைய கல்வி முறை பெரிய மாற்றங்களைக் கொண்டுள்ளதாகும். இந்நாட்டு மாணவர் ஒவ்வொருவரும் எந்த மொழியில் கல்வி கற்கவேண்டும் என்ற பிரச்னை இப்பொழுது எழுந்துள்ளது. மாணவர் ஒவ்வொருவரும் அவர்களது தாய்மொழியிலேயே கல்வி கற்கும் வசதியிருக்கவேண்டும். வல்வைவாசிகள் எதற்கும் அரசாங்கத்தை நம்பியிராமல் தாங்களாகவே தங்கள் காரியங்களைச் செய்துமுடிக்கும் வல்லமை படைத்தவர்கள். அந்த வல்லமையை ஆக்கிக் கொடுப்பது இக்கல்லூரி என்பதைச் சொல்ல மிகவும் சந்தோஷப்படுகின்றேன். மேலும் இக்கல்லூரியில், கமத்தொழில், கடற்றொழிற் கல்வியை ஏற்படுத்திவைப்பதற்காகப் பெற்றோர்கள் மிகவும் அக்கறை காட்டிவருகிறார்கள் என்பது தெளிவாகிறது.

கல்விஅமைச்சின் சிரேஷ்ட உதவிக் காரியதரிசி ஆனந்த குருகே தமிழில் பேசுகையில் கூறியதாவது:- இக்கல்லூரியின் பெற்றோர் ஆசிரிய சங்கமும் பழைய மாணவர் சங்கங்களும் இன்று என்னால் திறந்துவைக்கப் பட்டிருக்கும் கம்பீரமான கட்டிடங்களைக் கட்டி இந்நாட்டிலுள்ள இதேபோன்ற சங்கங்களுக்கு ஒருமுன்மாதிரியான செயலைப் புரிந்துள்ளனர் வல்வெட்டித்துறை மக்கள் செய்துவைத்துள்ள இச்சாதனையை இந்நாட்டு மக்கள் மறந்துவிட மாட்டார்கள். இப்பகுதி சிறுவர்களின் நன்மைக்காக அரசாங்கத்தை எதிர்பாராமல் பணம்திரட்டி இக்கட்டிடங்களை அமைத்து இளம் சந்ததியினுடைய கல்விப் பொறுப்பை நிலைநாட்டி வைத்திருக்கிறீர்கள் இந்நாட்டு பிரஜைகளுக்கு மேன்மையான கல்விவசதிகள் ஏற்படுத்துவதற்காக கல்வியில் பல மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறோம். இக்கல்லூரிக்கு 15 வருடங்களுக்கு முன் நான் யாழ். கச்சேரியில் இருந்தபோது விஜயம் செய்தேன். அன்றைய நிலைக்கும் இன்றைய நிலைக்கும் அதிக வித்தியாசத்தைக் கண்டுகொண்டேன். இக்கல்லூரியின் வளர்ச்சியைப் பற்றி இந்நாட்டின் ஏனைய கல்விக்கூடங்களுக்கும் தெரிய வைக்க விரும்புகிறேன்.

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது: இப்பகுதி பெற்றோர்கள் இக்கல்லூரியை முதல்தர கல்லூரியாக விளங்க வைத்து வருகிறார்கள். இக்கல்லூரி கல்வியில் பட்டுமல்ல கலாச்சாரம், விளையாட்டு, சாரணர் இயக்கம் எதிலுமே இந்நாட்டில் முதன்மை பெற்று விளங்கிவருவதை அறிந்து வருகிறோம்.

பட்டினசபைத் தலைவர் வி. இரத்தினவடிவேலு பேசுகையில் இப்பகுதியில் ஒரு பெண்பாடசாலை இல்லாத குறை பல வருடங்களாக இருந்து வருகிறது. அப்பாடசாலையைஏற்படுத்த வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் என்றார்.

பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ செயலாளர் திரு. எஸ். அருணாசலம் மகஜர் ஒன்றை திரு. குருகேயிடம் சமர்ப்பித்தார்.

திறந்தவெளியரங்கில் நடனம், சங்கீதம், நாடகங்கள் ஆகிய கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

—

### 'காமதேனு'

சென்னை, அக். 15

சென்னையில் புதிய நவீன சந்தையொன்று நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. இந்தச் சந்தைக்கு 'காமதேனு' என்று பெயரிடப்பட்டுள்ளது.


## வரி விளம்பரம்

### தேவை

**தொழிலாளர்**

அக்கராயன்குள வாய்க்கால் வேலை செய்ய கரும்புத்தோட்டத் தடியில் தொழிலாளர் தேவை. நிந்த ஊர் முஸ்லிம்கள் தினம் (ஒருவர்) 12/-க்கு மேல் சம்பாதிக்கிறார்கள். ஸ்தலத்தில் விண்ணப்பிக்கவும். விவேகானந்தன், இளைப்பாறிய என்ஜினீர். 1416

**வேலைபழகுபவர்கள்**

வேலை பழகுவதற்கு 18 வயதிற்குட்பட்டவர்கள் தேவை. நேரில் வரவும். கொழும்பு விருடியோ, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1415

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக்கினும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர் J. P, கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### Vacancy

Clerk, Cashier:

Qualification: S.S.C. Credit in English and with good knowledge in T[illegible]writing Cash security essential. Good prospects. Apply: Advt. NO. 1424, C/o Eelanadu, Jaffna.

### விற்பனைக்கு

**கோழிக்குஞ்சுகள்!**

ஒரு நாள் குஞ்சுகள் — ஒரு கிழமைக் குஞ்சுகள் - ஒரு மாசக் குஞ்சுகள் - மூன்று மாசக் குஞ்சுகள் - முற்பணம் வேண்டியதில்லை- தபால் மூலம் பதிவு செய்து கொள்ளவும். அருணா ஏஜென்சீஸ், அளவெட்டி. 1422

**மோட்டார் வள்ளம்:**


நல்ல நிலைமையிலுள்ள "மோட்டார் வள்ளம்" விற்பனைக்குண்டு. நீளம் 30' அகலம் 9'. 4'' X 3'' அளவுகள் கொண்ட வேப்பம் வளிகள் போடப்பட்டுள்ளது எஞ்சின் இல்லாமலும் வள்ளம் விற்கப்படும். செபஸ்தி பேதுரு, 7-ம் வட்டாரம், நெடுந்தீவு. 1423

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - தேவிகா
நடித்த
**பழநி**

**மகாத்மா தியேட்டர்**
(தெல்லிப்பழை)
தினசரி 6-30, 9-30
போயாதினங்களில் காலை 10 மணி
சிவாஜி — சாவித்திரி
நடித்த
**திருவிளையாடல்**

**3வது வெற்றி வாரம்!**

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கொட்டாஞ்சேனை)
விஜிதா (தெஹிவளை) | விஜயா (மட்டக்களப்பு) | ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
மொடேர்ன் (பண்டாரவளை) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தீவொளி (நுவரெலியா) | கல்யாணி (நாவலப்பிட்டி)



எம். ஜி. ஆர்., கே. ஆர். விஜயா
சௌகார் ஜானகி, நாகேஷ், பாலையா
மற்றும் பலர் நடிக்கும்
ஆர். ஆர். பிக்சர்ஸ்
**பணம் படைத்தவன்**

**REGAL—JAFFNA**
**NOW SHOWING**
TONY CURTIS,
KIRK DOUGLAS AND
BURT LANCASTER
in
THE LIST OF
ADRIAN MESSENGER

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
ZARAK KHAN
(HINDI)

நாள் முழுவதும் நறுமணம் வீசி
எல்லையில்லா
இன்பமூட்டுவது
**ஜெகன் மோகன்**
ஜவ்வாது பத்திகளே!
முற்றிலும் புதிய தயாரிப்பு
இன்றே
உபயோகித்து ஆனந்தமடையுங்கள்!
எங்கும் கிடைக்கும்

ஏகவிநியோகஸ்தர்கள்:

**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**
மருந்து, மருந்துச்சரக்கு, வாசனாதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.

53, காங்கேசன்துறை வீதி,
பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 541
Residence: 7068

"பாலேந்திரா பில்டிங்"
160, செட்டியார் தெரு,
கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### வியட்னும் நெருக்கடி வலுக்கிறது

# செப். 27 உறுதியை அமெரிக்கா கைவிட்டது

## சூழ்நிலையே காரணமாம்

சைகோன், அக். 15

வடக்கு வியட்னுமுக்கும், தெற்கு வியட்னுமுக்கும் இடையிலுள்ள நடுநிலைப் பிரதேசத்தின் கிழக்குப் பிராந்தியத்தில் குண்டு வீசுவதில்லையென்ற உறுதி இனித்தன்னைக் கட்டுப்படுத்தாது என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

தென் வியட்னுமிலுள்ள அமெரிக்க அதிகாரிகள் நேற்று சைகோனில் இதனை அறிவித்தனர்.

அமெரிக்க பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாரா சமீபத்தில் தென் வியட்னுமுக்குச் சென்று வந்ததைத் தொடர்ந்தே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

### காரணம்

வடவியட்னுமின் கட்டுப்பாட்டிற்றதன் மைதான் இந்த உறுதியை மதிக்காமல் நடக்கச்செய்து விட்டதென்றும், இதனுல்தான் இப்படியான ஒரு முடிவுக்கு வந்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

### குற்றச்சாட்டு

வியட்காங் கியர் அத்துமீறி இப்பகுதியில் ஊடுருவல் நடத்தி வருகிறர்களென்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியது.

சண்டையை நீடிக்க வேண்டுமென்ற எண்ணம் அமெரிக்காவுக்குள் கிடையாதென்றும், ஆனல் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அப்படி நம்மை ஆக்கிக்கொள்கிறதென்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

### செப். 27-ல்

வடக்கு வியட்னுமுக்கும், தெற்கு வியட்னுமுக்கும் இடையேயுள்ள நடுநிலைப் பிரதேசத்தின் கிழக்குப் பிராந்தியத்தில் குண்டு வீசுவதை நிறுத்தியிருக்கிறதென செப்டம்பர் 27-ல் அறிவித்திருந்தது.

## அயூப்கான் ஈரான் சென்றுர்

கராச்சி, அக். 15

பாகிஸ்தான் ஜனுதிபதி அயூப்கான் நேற்று இங்கிருந்து டெஹ்ரானுக்குப் புறப்பட்டார். அவர் ஈரானுக்கு நான்கு நாள் விஜயம் மேற்கொண்டுள்ளார். ஜனுதிபதியுடன் பாகிஸ்தான் விமானப் படைத் தளபதி ஏர் மாஷல் நூர்கானும் சென்றிருக்கிருர்.

பி. டி. ஐ.

## ஜோன்ஸனை கொலைசெய்ய; பயமுறுத்தல்

நியூயோர்க், அக். 15

இரு தினங்களுக்கு முன் நியூயோர்க் மூலம் கொலம்பஸுக்குச்சென்ற அமெரிக்க ஜனுதிபதியை அப்பிரயாணத்தின்போது வழியில் கொலைசெய்ய நடைபெற்ற பயமுறுத்தலையிட்டு விசாரணை நடாத்த எப். பி. ஐ. யும், இரகசிய சேவையும் கேட்டுக்கொள்ளப்பட்டன. புருக்லினிலுள்ள குறிப்பிட்ட இடமொன்றில் ஜோன்சன் இறங்குகையில், அவர் கொலைசெய்யப்படுவார் எனப் பொலிசாருக்கு ஓர் அனுமதேய தொலைபேசிச் செய்தி கிடைத்தது.

பி. டி. ஐ.

## ஏர்ஹார்ட் விஜயம் ஒத்திவைக்கப்பட்டது

பொன், அக். 15

அடுத்த மாதம் இந்தியா, பாகிஸ்தான், பர்மா ஆகிய ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவிருந்த மேற்கு ஜெர்மன் தலைவர் லட்விக் ஏர்ஹார்ட் தனது விஜயத்தை டிசம்பருக்கு ஒத்திப்போட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆறு வயது மகள் தந்தையினுல் பலாத்காரம்

ஜோஹன்னர்ஸ்பேர்க் ஒக்.15

தனது 6 வயதுமகளைப் பலாத்காரம் செய்தகுற்றத்திற்காக இங்கு ஓர் வெள்ளையர் (வயது32) வெள்ளையர் நாலரை வருடம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். வழக்கின்போது எதிரியின் மனைவியே முக்கிய அரசாங்க தரப்புசாட்சியாக தசா இருந்தார். சிறுமியின் வயதை முன்னிட்டு வழக்கு இரகசிய முறையிலேயே நடந்தது. அதுடன் சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களும் வெளியிடப்படவில்லை. குடிபோதையில்தான் எதிரி இக்குற்றத்தை செய்திருந்தபோதும், அவர் தான் செய்த ... பதி கருத்துத்தெரிவித்தார்.

## தமிழ் நாட்டுச் செய்திகள்

### சென்னையா? கோவையா? கருணுநிதிக்கு

தி.மு.கழகத்தைச்சேர்ந்த தலைவர் மு. கருணுநிதி வருகிறபொதுத் தேர்தலில் சென்னை நகரில் அல்லது கோவையிலிருந்து தமிழ்நாடு சட்டசபைக்கு போட்டியிடுவாரென்றுதெரிகிறது. 1957-ம்ஆண்டு தேர்தலில் திருச்சி மாவட்டம் குளித்தலைத்தொகுதியிலும், 1962-ம் தேர்தலில் தஞ்சை தேர்தல் தொகுதியிலும் மு. கருணுநிதிபோட்டியிட்டது தெரிந்ததே.

சென்னைத்தொகுதியில் அவர் போட்டியிட்டால் எழும்பூர் அல்லது வசாதாப்பேட்டைத்தொகுதியில் போட்டியிடுவாரென்று தெரிகிறது.

ஃ ஃ ஃ

### சர்வகட்சித் தலைவர்சந்திப்பு

சென்னையில் சர்வகட்சித் தலைவர்கள் சந்தித்து பேசினுர்கள். சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் நல்லசிவம் இதற்கு ஏற்பாடுகள் செய்தார். அரிசிப் போராட்டம் நடத்துவதற்காகப்போராட்டக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது.

என். வி. நடராசன்(தி.மு.க.) ம. பொ. சிவஞானம் (தமிழரசு) எம். ஆர். வெங்கட்ராமன் (இடதுசாரி கம்யூனிஸ்ட்) நல்லசிவம் (சோஷலிஸ்ட்) மணலி கந்தசாமி (வலது சாரிகம்யூனிஸ்ட்) ஆகியோர் கமிட்டியின் அங்கத்தர்கள்.

### சுலோசனு மீண்டும் போட்டி!

சென்னை பெரம்பூர் தொகுதியில் தமிழ்நாடு சட்டசபைக்கு காங்கிரஸ்சார்பில் சுலோசனு எம்.எல்.ஏ போட்டியிடுகிறுர்.

ஃ ஃ ஃ

### வட சென்னைக்கு யார்?

வடசென்னைடெல்லிசட்டசபைத்தொகுதியில் இருந்து போட்டியிட அந்தோனிப் பிள்ளையும், சென்னைநகரசபை காங்கிரஸ் தலைவர் விநாயகமூர்த்தியும் காங்கிரஸ் சார்பில் போட்டியிட மனுச்செய்துள்ளனர். அந்தோனிப்பிள்ளை 1957-ல்நடந்த பொதுத்தேர்தலில் வடசென்னையில் சுயேச்சையாக போட்டியிட்டுடெல்லிசட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்,

ஃ ஃ ஃ

### முன்னுள் பெண் மந்திரி குதிப்பார்

முன்னுள் பெண் மந்திரி லூர்தம்மாள் அடுத்த பொதுத்தேர்தலில் குதிப்பாரென்று அறிவிக்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் சார்பில் அவர் போட்டியிடுவார் எனசெய்திகள் கூறுகின்றன. கன்னியாகுமரி மாவட்டம் இன்விபூர் அல்லது குளச்சல் தொகுதியில் தன்னை நிறுத்தும்படி லூர்தம்மாள் மனுச்செய்திருக்கிருர்.

# கொடுத்த வாக்குறுதிகளை அமெரிக்கா காப்பாற்றியுள்ளது

### ஜனுதிபதி ஜோன்சன் பெருமிதம்

டெல்வயர், அக் 15

வியட்னும் யுத்தத்தைச் சமரச முடிவிற்குக் கொண்டுவர அமெரிக்கா, காங்கிரஸ் சபையின் உதவியுடன் இறுதிவரை முயற்சிகளை மேற்கொள்ளுமென ஜனுதிபதி ஜோன்ஸன் அறிவித்துள்ளார்

நியுயோர்க்கில் லாவோஸ் இளவரசரைச் சந்தித்துவிட்டு இங்கு வந்த ஜனுதிபதி, அமெரிக்க காங்கிரஸ் சபை கல்வி, சுகாதாரம், உணவு முதலான துறைகளில் இவ்வருடம் நிறுவிய சாதனையைக் குறிப்பிட்டபின், இறுதியில் 'சமாதானம்' பற்றிக்குறிப்பிட்டார்.

'உங்களது 89-வது காங்கிரஸ் சபை நிலையானசமாதானத்தை ஏற்படுத்த உங்கள் ஜனுதிபதி மேற்கொண்ட முயற்சிகளுக்குபேராதரவு அளித்துள்ளது'. தாய்நாட்டிலும், உலகிலும் அமெரிக்கா தனது வாக்குறுதிகளைக் காப்பாற்றியுள்ளதாக ஜனுதிபதி குறிப்பிட்டார்.

இவ்வாண்டில் தென்வியட்னும் சமூக, அரசியல் முன்னணியிலிருந்து, கம்யூனிஸ ஆக்கிரமிப்பைத் தடுக்கும் பன்னுடுகளின் முயற்சிவரை பல துறைகளில் குறிப்பிடக்கூடிய முன்னேற்றம்அடைந்துள்ளதாகக்குறிப்பிட்டார்.

வியட்னும் நிலை குறித்தும் சமரசம் ஏற்படுத்த மேற்கொள்ளும் முயற்சிகள் பற்றியும் பிரஸ்தாபித்த ஜனுதிபதி, குண்டுபோடுவதை மீண்டும் நிறுத்துமாறு விடுக்கப்பட்டவேண்டுகோளை நிராகரித்தார். அமெரிக்காகுண்டு போடுவதை முன்னர் இருதடவை நிறுத்திவைத்த பொழுதிலும், இதற்கு கம்யூனிஸ்டுகளிடமிருந்து எதுவித பதிலும் கிடைக்கவில்லையென்பதை நினைவுகூர்ந்தார்.

'ஆக்கிரமிப்பாளர் குண்டு போடுவதை நிறுத்தினுல்; நாமும் நிறுத்துவோம்...... அவர்கள் படைகளை வாபஸ் பெற்றுல், நாமும் வாபஸ் பெறுவோம். அவர்கள் தமது துருப்புக்களை வாபஸ் பெறச் சம்மதித்தால், எமது துருப்புக்களை வாபஸ் பெறுவதற்கான நகலை முன்வைக்கச் சித்தமாக இருக்கிறேம்' என்றுர்.

# கவர்ச்சி மனிதர்

## சிங்கப்பூர் பிரதமர் லீக்கு டாக்டர் ஹுசைன் புகழ்மாலை

சிங்கப்பூர், அக். 15

''தொழில் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் பாரதமும் சிங்கப்பூரும் இணைந்து பிணைந்த நட்பு நாடுகளாக விளங்க வேண்டும்'' என்று இந்திய உப ராஷ்டிரபதி டாக்டர் ஸாகிர் ஹுசைன் இங்கு நேசக்கரம் நீட்டினுர்.

டாக்டர் ஹுசைன் இங்கு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ளார். சிங்கப்பூரில் இவருக்கு நேற்று அளிக்கப்பட்ட பிரமாண்டமான வரவேற்பில் உரை நிகழ்த்தினுர். பாரத வர்த்தகக் கழகம் இந்த வரவேற்பை ஒழுங்கு செய்திருந்தது.

டாக்டர்ஸாகிர் ஹுசைன் மேலும் பேசுகையில் நம் நாட்டு மக்கள் சிங்கப்பூரில் தலை நிமிர்ந்து, சகல உரிமையும் பெற்று வாழ்வதைப் பார்க்கும் போது என்னையறியாமலே உள்ளம் பூரித்துக் கொள்கிறதென்றுர்.

சிங்கப்பூர் பிரதமர் திரு. லீ-குவான்-யூ அண்மையில் பாரதத்துக்கு விஜயம் செய்ததை தமது பேச்சில் உப ராஷ்டிரபதி குறிப்பிட்டார்.

### லீ பாரதத்தை கவர்ந்து விட்டார

''பிரதமர் லீ-குவான்-யூவின் பாரத விஜயம் இரு நாடுகளிடையேயும் ஒரு பிரிக்க முடியாத இணைப்பை ஏற்படுத்தியுள்ளது திரு. லீ பாரத மக்களை வெகுவாகக் கவர்ந்து விட்டார்'' என்று டாக்டர் ஹுசைன் சொன்னுர்.

''உங்கள் பிரதமர் திரு. லீ குவான்-யூ ஒரு கவர்ச்சி மனிதர் என்றே சொல்லலாம். இல்லாவிட்டால் எம்மையெல்லாம் அவரால் கவர்ந்திருக்க முடியுமா?'' என்று கேட்டார் டாக்டர் ஹுசைன்.

## பத்து லட்சம் டொலர் களவு

மொன்ட்ரீல், அக்.15

பதினைந்துதபாற்பைகளில் இருந்த 10லட்சம் டொலர், மொன்ட்ரீல் சர்வதேச விமான நிலயத்திலுள்ள தபால் பட்டுவாடா அறையிலிருந்து களவாடப்பட்டது. அறையைச் சுற்றியுள்ள இரும்புக்கம்பிகளை வெட்டியே கள்வர் புகுந்துள்ளதாகப் பொலிசார் அறிவித்தனர். (பி.டி.ஐ.)

## தென்னுபிரிக்காவில் புதிய சட்டம்

கேப்டவுன், அக்.15

சந்தேகத்துக்குள்ளான திவிரவாதிகளையும், சதிகாரரையும் வாரந்து இல்லாமலே கைது செய்யவும் தொடர்ந்து 14 நாட்களுக்கு தடுப்புக்காவலில்வைத்திருக்கவும் உயர்தர தென்னுபிரிக்கப் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அதிகாரமளிக்கும் புதிய மசோதா ஒன்று தென்னுபிரிக்கபார்லிமென்டினுல் நிறைவேற்றப்பட்டுள்ளது. (பி.டி.ஐ)

# 'சோஷலிச அபிவிருத்தியல் மற்றுமோர் கட்டம்'

## செங்காவலர்பற்றி இலங்கைத் தூதுவர்

ஹொங்கொங், அக். 15

சீனுவிலுள்ள இலங்கைத் தூதுவரான திரு. ரூபேர்ட் குணவர்த்தனு, 'நவசீனுவின் செங்காவலர் இயக்கம் சோஷலிச அபிவிருத்தியில் மற்றுமோர் கட்டமாகும்' என இங்கு கூறியுள்ளார்.

செங்காவலருக்கு அளிக்கப்பட்டுள்ள சில அதிகாரிகள் பிற்போக்குவாதிகளின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தும் நோக்கங்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தனது அரசாங்கத்துடன் கலந்து பேசுவதற்காகக் கொழும்புக்குச்செல்லுமுன், விமானநிலையத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறிய திரு. குணவர்த்தனு, செங்காவலர் இயக்கம் மேலும் வளருமெனத் தாம் ... தாகக் குறிப்பிட்டார்.

பி. டி. ஐ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பொருள்களின் இயற்கையமைப்பில், மனிதனது மனத்தின் அப்பாற்பட்டதும் ஆராயும் அறிவு புகமுடியாததும் ஆகிய ஓர் இயல்பு இருக்கிறது. இத்தகைய இயல்பை ஆக்கித் தருவது மனிதனை விட மேம்பட்டதாதலின் கடவுளைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்?

—ஸிஸிரோ

ஈழநாடு

EELANADU National Tamil Daily: Post Box 49, JAFFNA.
Telegrams : EELANADU Jaffna; Telephone 1389

வாழ்ப்பணம் பராபவ ஆண்டு புரட்டாதி மீ 30 உ (16-10-66)

# பல்கலைக் கழகத்தில் தமிழாராய்ச்சி

இலங்கைப் பல்கலைக் கழகங்களில் தமிழ்மொழிக்குத் தனிப் பிரிவு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று தேசிய கல்விச் சபை தீர்மானித்திருக்கிறது. இத்தீர்மானத்தின்படி வித்தியோதய வித்தியாலங்கார பல்கலைக் கழகங்களிலும் தமிழ்ப் பகுதி ஆரம்பிக்கப்படவிருக்கிறது. பல்கலைக் கழகங்களில் தமிழ்ப் பிரிவுகள் புதிதாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற தீர்மானமும் நோக்கமும் வரவேற்கப்பட வேண்டிய மகிழ்ச்சியளிக்கும் விஷயமாகும். புதிய பிரிவு ஆரம்பிக்கப் படுவதற்கு முன்னர் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் இப்பொழுதுள்ள வசதிகளைக் கொண்டே தமிழ் ஆராய்ச்சி சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பகுதிக்கு வித்துவான் பொன். முத்துக்குமாரன் இப்பொழுது நியமிக்கப் பட்டிருப்பது தமிழ் ஆராய்ச்சி முயற்சிக்கு வழிவகுப்பதாக இருக்க வேண்டும்.

இலங்கை பல்கலைக் கழகத்திலும் அதற்கு முன் இருந்த இலங்கை சர்வகலாசாலைக் கல்லூரியிலும் தமிழ் முக்கியத்துவம் பெற்று வந்தது. சென்ற 45 வருடகாலமாகத், தமிழ் பல்கலைக் கழக பிரதான பாடமாக இருந்த போதிலும் தமிழ் ஆராய்ச்சியும் தமிழ் உயர்தரக் கல்வியும் போதிய முன்னேற்றம் அடையவில்லை. ஈழவள நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து பல கலைகளையும் வளர்த்துள்ள போதிலும் தமிழ் உலகத்தில் தற்போது இலங்கைத் தமிழ் கலையும் தமிழ் ஆராய்ச்சியும் தனித் தன்மை பெற்றிருக்கவில்லை. இலங்கைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் மரபு முறையில் கற்ற பண்டிதர்களையும் அவர்களின் ஆராய்ச்சி ஆற்றலையும் சரியான முறையில் பயன்படுத்தாததும் இதற்கு ஒரு காரணமாயிருக்கலாம். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராயிருக்கும் இராமநாதன் செட்டியார் ஒரு தமிழ் பாண்டித்திய வல்லுனரும் ஆராச்சியாளருமாவார். அவர் ஓர் ஆங்கில பட்டதாரியல்ல. இவர் மாத்திரமல்ல தமிழ் மரபில் பாண்டித்தியம் பெற்ற தமிழ் அறிஞர்கள் வித்துவான் வெள்ளைவாரணனார் வித்துவான் தண்டபாணி தேசிகர், கதிரேசன் செட்டியார் போன்ற அறிஞர்கள் தமிழை உயர்தரநிலைக்கு ஏற்றிவைக்கும் பணியில் தொண்டு புரிந்தார்கள் என்பதற்கு ஆட்சேபமில்லை.

இலங்கையிலும் பாரம்பரிய முறையில் தமிழைக் கற்று ஆராய்ச்சி செய்த தமிழ் அபிமானம் செப்பிய அறிஞர்களையும் பல்கலைக்கழக விரிவுரையாளர், ஆராய்ச்சியாளர்களாக பயிக்க வேண்டியது அவசியம். தமிழரின் வரலாற்றையும் தமிழ் கலையினது செல்வங்களையும் இலங்கையில் பேணி வளர்க்க வேண்டிய பொறுப்பு இலங்கைப் பல்கலைக்கழக தமிழ் பிரிவினது கடமையாகும். இவர்களே இறுதியில் தகுந்த கலைச் சொல் அகராதி வகுக்க வேண்டியவர்கள் தமிழரின் வரலாற்றை தமிழ் காப்பியங்களிலிருந்தும் கலைகளிலிருந்தும் ஆராய்ந்து எடுத்துக் காட்டவேண்டியவர்களும் இவர்களே. இவர்களைபண்டை காலத்தில் தமிழ் கவிஞரும் எழுத்தாளர்களும் விட்டுபோந்த தமிழ் பொக்கிஷங்களை தேடி எடுத்து தமிழ் உலகத்திற்கு கொடுக்க வேண்டும்.

ஆரிய சக்கரவர்த்தி காலத்தில் தமிழ் கலைஞர்கள் பல துறைகளிலும் நூல்கள் வெளியிட்டுள்ளார்கள். அதன் பின்னர் அமெரிக்க மிஷனரிமாரின் வழித்தோன்றல்களும் கத்தோலிக்க குருமாரும் பல துறைகளில் நூல்கள் வெளியிட்டுள்ளனர். காப்பியங்களும் நாடகங்களும் விட்டுச் சென்றுள்ளனர். இவைகளை ஆராய்ந்து தொகுத்து தமிழ் உலகத்திற்கு அளிக்க வேண்டும். இத்துறைகளில் எல்லாம் தொண்டாற்றுவதற்கு பிறநாட்டு முறையில் கல்வி கற்ற பட்டதாரிகள் மாத்திரம் தேவையென்ற கருத்து நீங்க வேண்டும். இந்தியாவில் கிழக்கத்திய கலைகளை பேணுவதற்கும் காப்பதற்கும் பழையமுறையில் தோய்ந்து கல்விக்கடல்களாயிருக்கும் பழைய கலைஞர்களையும் அறிஞர்களையும் ஆதரித்து அழைத்து தமிழுக்குப் பயன்படுத்தவேண்டும். இந்தியப் பல்கலைக்கழகங்களுக்குக் கீழத்தேசக் கலைகளை ஆதரிக்கும் வித்தியாலயங்களுக்கும் பல்கலைக்கழக மான்யசபை விசேஷ உதவி புரிந்துவருகிறது. இதைவிடப் பழைய கலைஞர்களுக்கும் பழையமுறையில் அவர்களைவளர்ப்பதற்கும் உபகாரச்சம்பள மூலமாகவும் மான்ய உதவி அளிக்கப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தில் வித்துவான் பொன். முத்துக்குமாரன் பேராதனை பல்கலைக்கழகத் தமிழ்ப்பிரிவில் நியமிக்கப்பட்டது நம்பிக்கை அளிக்கிறது. பல்கலைக்கழகத் தமிழ்ப் பிரிவு பழைய பண்பாட்டு முறையில் தமிழைக் கற்ற வித்துவான்களையும் கல்வித்துறையில் பயன்படுத்தவேண்டும். அவர்களின் ஆராய்ச்சியையும் தமிழார்வத்தையும் ஆதரித்து வளர்க்கவேண்டும்.

புதிய கல்வி, ஊக்கத்தையும், எம் நாட்டில் பண்டுதொட்டு வளர்ந்து வந்த தமிழ்க் கல்வியின் தூண்களாகிய புலவர்கள் பண்டிதர்களையும் ஒன்றுசேர்த்து தமிழுக்குப் பயன்படுத்துவது தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் முன்னேற்றத்துக்கும் ஈழவளநாட்டின் ... என்று நம்பலாம்.

# சக்தி துதி

— வேளகம் நடராசா —

நித்தியமும் கன்னிகையாய் நிற்கும் தேவி
நிறைகருணை நினைந்தூட்டும் நீல மஞ்ஞை
எத்தனையோ அதர்மங்க ளியற்றி னூலும்
எட்டுணையும் விட்டகலா எங்கள் மாதா
சித்தியெட்டும் பெற்றெங்கள் சில மோங்க(ச்)
சித்தமது கொண்டோநீ சிறந்த மூன்று
சத்திவடி வாகிநின்றாய் சாந்த ரூபி
சந்ததமும் நின்சரணம் போற்றி னோமே.

(இச்சாசத்தி)

செந்நிறமுங் கனதனமுஞ் செறியக் கொண்டாள்
செயமளிப்பாள் தாமதத்தைச் சேரப் பெற்றாள்
இந்திராதி தேவரது இடுக்கண் போக்கி
இதஞ்செய்ய மகிடனைமுன் இன்மை செய்தாள்
எந்நாளும் வீரத்தை யிரப்போர்க் கீந்து
இனிதிருப்பாள் துர்க்கையென நாமம் பூண்டாள்
வந்தனைகள் செய்தவளை வழுத்தி யேத்தி
வாழ்வாங்கு வையத்தில் வாழ்வோம் நாமே.

(கிரியாசத்தி)

பங்கயத்தில் வீற்றிருக்கும் பசுமை காலும்
பச்சுடம்பில் நீற்றழகு பதிந்தி ருக்கும்
தங்குமொரு இராசதத்தின் தன்மை பெய்தி
தகமைதரும் செல்வத்தின் தலைவி யான
பைங்கிளியே! இலக்குமியே! பாவை நல்லீர்
பதுமைநிதி தந்திடுவாய் பஞ்சம் போக(ச்)
செங்கமலத் தாயேநின் செம்மை சான்ற
செய்யதிரு வடிபோற்றி செய்திட் டோமே.

(ஞானசத்தி)

வெள்ளைத்தா மரையினிலே வீற்றி ருந்தாய்
வெண்ணொளியே யுனக்கழகாய் விபந்து நின்றாய்
உள்ளத்தி லூற்றெடுக்கும் உண்மை ஞான
ஒப்பரிய பொருளுக்கோ ருருவங் கண்டாய்
தெள்ளமுதே! சாத்திகம் தேர்ந்து பெற்றாய்
தெவிட்டாத சங்கநிதித் தேவியானாய்
உள்ளுந்தோ றுள்ளம்நெக் குருகா நிற்கும்
உத்தமியே! சரஸ்வதியே உய்விப் பாயே.

## பிரதமருக்கு பண்டிதர் மகஜர்

கிளிநொச்சி, ஞாயிறு

'தமிழ் மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு எட்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டன. அச்சட்டப்படி நிர்வாக அறிக்கைகள், அரசாங்க வர்த்தமானிகள் முதலியன யாவும் தமிழிலும் வெளியிடப்படவேண்டும்." எனக் கிளிநொச்சி எம். பி. திரு. க. பொ. இரத்தினம் பிரதம மந்திரி திரு. டட்லி. சேனநாயக்காவிற்கு ஒரு மகஜரை அனுப்பியுள்ளார். "பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் எனக்கு அனுப்பப்படும் அறிக்கைகள் தமிழில் இல்லாது சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமே இருக்கின்றன. சென்ற யூன் மாதம் அச்சுக்கு அனுப்பப்பட்டு ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட 10 அறிக்கைகள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் தான் வெளியிடப்பட்டுள்ளன," என்று அம்மகஜரில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நவராத்திரிவிழா

கோண்டாவில், வெள்ளி

இணுவில் சிவகாமிஅம்மன் கோவிலில் இணுவில் இந்து இளைஞர்சங்க ஆதரவில் நவராத்திரிவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட இருக்கிறது. விழாவில் சைவப்பெரியார்களது சொற்பொழிவுகளும், இன்னிசைக்கச்சேரிகளும் இடம்பெறும்.

## காரியாதிகாரி அலுவலகம்

உடுப்பிட்டி, சனி

வடமராட்சிப் பிரிவுக் காரியாதிகாரிக்கந்தோர் தற்பொழுது இருக்கும் இடத்திலிருந்து பருத்தித்துறை பஸ் நிலைய அரங்கின் அருகில்கட்டப்பட்டிருக்கும் புதியகட்டடத்துக்கு மாற்றப்படவிருப்பதாக அறியப்பட்டுள்ளது. உடுப்பிட்டித்தொகுதி மக்களின் சௌகரியத்திற்காக உடுப்பிட்டிப்பகுதியில் காரியாதிகாரி அலுவலகம்ஒன்று நிறுவப்பட இருக்கிறது. இதற்கான அலுவலகம் நெல்லியடியில்அல்லதுபுருப்பொறுக்கியில் அமையலாம்

## நாட்டிலும் நகரிலும்

தமிழகத்தில்எத்தனையோ லட்சம் கோயில்கள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் மதுரை மீனாட்சியம்மன் கோயில், திருச்செந்தூர் முருகன் கோயில், திருப்பதிவெங்கடேசர் ஆலயம், நல்லூர் கந்தசுவாமி கோயில், மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோயில்—என்று ஒவ்வொரு தனிப் பெயரும் இருக்கிறது. ஆனால் சும்மா 'கோயில்' என்று நாம் குறிப்பிடுவது சிதம்பரத்திலுள்ள நடேசப்பெருமான் ஆலயத்தை. 'கோயிற்றிருப்பதிகம்' என்று மாணிக்கவாசக சுவாமிகள் சிதம்பர நடேசர்மீது ஒரு தனிப்பதிகம்பாடியுள்ளார். 'கோயில்' என்றால் சிதம்பரம் என்று ஆகிவிட்டது.

யாழ்ப்பாணத்தில் பலகல்லூரிகள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தனிப்பெயர் இருக்கிறது. ஆனால் வெறுமனே யாழ்ப்பாணக்கல்லூரிஎன்றபெயர் வட்டுக்கோட்டையில் அமெரிக்க மிஷனரிமாரால் ஸ்தாபிக்கப்பட்ட கல்லூரியையே குறிக்கிறது.

கிறிஸ்தவமிஷனரிமார் இலங்கையில், முக்கியமாக யாழ்ப்பாணத்தில், செய்த தொண்டுகள் அளப்பரியன என்பதுபலரும் அறிந்தவிஷயம். அமெரிக்க மிஷன் பாதிரிமார் 'வலக்கையால் வழங்குவதை இடக்கைஅறியாமல் வழங்குதி' என்றவாறு அதிக பகட்டோபமில்லாமல் இரகசியமாக எண்ணற்கரிய பல தொண்டைச் செய்திருக்கிறார்கள். 1823ம் ஆண்டு 'பட்டிக்கோட்டா செமினறி' என்ற பெயருடன் அவர்கள் ஸ்தாபித்த பாடசாலையே இன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியாக சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. இதுவே இலங்கையின் மிகப் பழமையான ஆங்கிலப் பள்ளிக்கூடமாகும். உடுவில்மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு பெண்கள் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன்கல்லூரி ஆகியகலாபீடங்களும் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த ஆஸ்பத்திரியும் இணுவில் மக்லியட் பிரசவ ஆஸ்பத்திரியும் அமெரிக்க மிஷனரிமாரால் எமக்குக் கிடைத்த பொக்கிஷங்கள்.

மானிப்பாய் ஆஸ்பத்திரியில் 1920-ம், 30-ம் வருடங்களில் கடமையாற்றிய டாக்டர் ஜேம்ஸனை இன்றும் மானிப்பாய் சுற்றுப்புற பற்றில் வசிக்கும் வயது வந்தவர்கள் தெய்வம் எனப் போற்றுவார்கள். இவரைப்போலவே டாக்டர் கெனடியும் வேறு பல டக்டர் அம்மாமாரும் யாழ்ப்பாணத்தவருடைய நெஞ்சத்தில் அழியாதஇடம் பெற்றுவிட்டவர்கள்.

வணக்கத்துக்குரிய கலாநிதி ஸிட்னி கிட்றிட்ஜ் பங்கர் 1937-ம் ஆண்டு நவம்பர் மாதம் யாழ்ப்பாணத்துக்கு வந்து யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்று நேற்றுவரை தமது முன்னோர்களின் அடிச்சுவட்டில் கல்வித்தொண்டும் சமயத்தொண்டும்புரிந்துவிட்டு இந்தியா செல்கிறார். வட்டுக்கோட்டையில் ரெவரண்ட் பங்கர் மேல்வகுப்பு மனேஜராகவும், பட்டதாரி வகுப்புகளுக்கு பிரின்சிப்பலாகவும் கடமையாற்றியதோடு பல வருடங்களாக இலங்கையின் பல்வேறு கிறிஸ்தவ சபைகளின் யூனியனுக்கு இணைப்பு கமிட்டியின் தலைவராகவும் தொண்டாற்றினர். மருதனாமடத்திலுள்ள கிறிஸ்தவ சேவா ஆசிரமத்திலும் அவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு.

(4-ம் கலம் பார்க்க).

(5-ம் கலத் தொடர்ச்சி)

இவருக்கு முன் வட்டுக்கோட்டை கல்லூரி அதிபராயிருந்த வண. ஜோன் பிக்னல் தமது பேராற்றலாலும் நன்னடத்தைகளாலும் யாழ்ப்பாணத்து மக்களின் நன்மதிப்பைப்பெற்றவர் மாணவர் முன்னேற்றத்துக்காக பிக்னல் எடுத்த முயற்சிகளை பிரிட்டிஷ் அரசாங்கமே அவ்வளவாக விரும்பவில்லை. அப்பேசிப்பட்டவரின் வாரிசாக வந்து டாக்டர் பங்கரும் அவரைப்போலவே புகழ்பெற்றுவிட்டனர். பிக்னலைப் போலவே இவரும் இலங்கையரோடொத்து வாழ்ந்து நிதானமாகவும் திறமையாகவும் தமது வேலைகளை நிறைவேற்றினார்.

டக்டர் பங்கர் ஓய்வு நேரங்களில் இலங்கையில் உள்ள பறவையினங்களைப் பற்றி ஆராய்ந்து அவற்றைப்பற்றி சிறிய நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

இந்தியாவில் கிறிஸ்தவ உயர்தரக்கல்வியோடு சம்பந்தப்பட்டிருந்த டக்டர் பங்கர் மேற்கொண்டும் இந்தியாவிலிருந்தவண்ணம் இத் தொண்டில் ஈடுபடுவாரென்று தெரியவருகிறது.

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை- சீன நட்புறவு வளர்ந்து வருகிறது

## யாழ்ப்பாணத்தில் சீனக்குடியரசு தேசிய தினவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

''காலப்போக்கில் இலங்கையினதும் சீனாவினதும் நட்பு வளர்ந்துகொண்டு வருகிறது. வியாபாரத்திலும் சமத்துவத்திலும் இரு நாடுகளின் உறவு வலுப்பட்டுக்கொண்டு வருகிறது. கடந்த 10 ஆண்டுகளாக வளர்ந்துவரும் இந்த நல்லுறவானது மேலும் வளர வேண்டுமென்றும், நீடுழி வாழ வேண்டுமென்றும் வாழ்த்துகிறேன்''. இவ்வாறு யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் சீனக்குடியரசின் தேசியதினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை மக்கள் சீனக்குடியரசின் ஸ்தானிகராலய உதவிச் செயலாளர் திரு. சௌவூ-சின் கூறினார். அவர் தமது சீன மொழியிலேயே சபையோருக்கு நன்றியும் வணக்கமும் தெரிவித்தார். அவரது பேச்சின் தமிழாக்கம் மொழிபெயர்க்கப்பட்டது. அவர் தொடர்ந்து மேலும் பேசியதாவது: ''சீனாவினதும் இலங்கையினதும் நட்புறவானது ஆசிய ஆபிரிக்க நாடுகளின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும், சுபிட்சத்துக்கும் வழிகோலும், சோஷலிஷம் தழைத்தோங்கும். இதை உணர்ந்த ஏகாதிபத்திய வாதிகளும், திரிபுவாதிகளும் அச்சங்கொண்டுள்ளனர். அவர்கள் இந்த நட்புறவு வளர்ச்சியைக் குறைக்க முயலுகின்றனர்'' என்றார்.

விழாவுக்குத் தலைமைவகித்த ஆசிரியர் திரு.ஏ. எஸ். கனகரத்தினம் பேசியதாவது:— ''நமது இலங்கையைப் பொறுத்தவரையில் ஏகாதிபத்தியநாடுகள் அன்றிலிருந்துஇன்றுவரை வியாபாரத்தின் மூலம் அதிகவிலையில் தமது பொருட்களை எமக்குத் தந்து எம்மைச் சுறண்டிக் கொண்டேயிருக்கின்றன. ஆனால் சீனா எமது பொருட்களைத்தான் வாங்கி அதிலுக்கு பண்டமாற்றாக எங்கள் முக்கிய தேவையான அரிசியைத்தந்துதவியிருக்கிறது. முக்கிய ஏற்றுமதிப்பொருளான எமதுரப்பரை சீனா வாங்கியிருக்கிறது. எம்மைமட்டுமல்ல ஆபிரிக்கா, கீழைத்தேச நாடுகளையும் ஏகாதிபத்திய நாடுகள் சுரண்டிக்கொண்டிருக்கின்றன. இந்தச் சுரண்டலை வெளிப்படையாக தவர்க்கும் ஒரு சோஷலிஷ நாடு சீனாவே. எனவேதான் ஏகாதிபத்திய வாதிகள் சீனாவுக்குப் பயப்படுகிறார்கள். ஆசியாவில் சகல வல்லமையும் படைத்த ஒரு பாட்டாளிவர்க்கசோஷலிஷ நாடு ஒன்று இருக்குமேயானால் அது சீனாவே. பெரிய நாடாக சீனா ஆசியாவில் திகழ்வதினாலேயே ஏகாதிபத்திய வாதிகள் ஆசிய நாடுகளை ஆக்கிரமிப்பதில், சுரண்டுவதில் பின்வாங்குகிறார்கள். உலகவியாபாரச் சந்தையில் ஆசிய நாடுகள் ஏகாதிபத்திய வாதிகளால் சுரண்டப்படுகின்றன. எனவே இவற்றை எல்லாம் வெளிப்படையாக எதிர்த்துநிற்கும் சீனாவின் குடியரசு தினம் பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைத்தினமாகும். அத்தினத்தை நாமும் மனமகிழ்ச்சியுடன் கொண்டாடுவோமாக''.

மற்றும் திரு. எஸ். இராசா திரு.மு. கார்த்திகேசன், திரு. வி. கந்தசாமி, திரு. எஸ். சேவற்கொடியோன் ஆகியோர் சீனாவின்கலாசாரப் புரட்சியைப்பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் பேசினர்.

---

## வாரியார் வருகிறார்

சுழிபுரம், சனி

திருமுக. கிருபானந்தவாரியார் அடுத்த ஆண்டு தை மாதம் சுழிபுரம் அறுபத்திமூவர்குருபூசைமடத்துவிழாவில் கலந்து கொள்வதற்கு வருவதாக சம்மதம் தெரிவித்துள்ளார். சில வசதியீன காரணமாக தற்பொழுது வரமுடியாமல் இருப்பதாகவும் மே மாதம் வருவதாகவும் அறிவித்துள்ளதாகத் தெரிகிறது சுழிபுரம், கொழும்பு, வல்வெட்டித்துறை போன்றஇடங்களிலும் இவர் சமய பிரசங்கங்கள் செய்வாரெனவும் தெரியவருகிறது.

# இளைஞர் ரிமாண்டில்

## மாஜிஸ்டிரேட் உத்தரவு

மாவிட்டபுரம், சனி

''நீர் ஓர் இளைஞராகஇருந்துகொண்டு வயதுமுதிர்ந்த இருவரைத் தாக்கியிருக்கிறீர். உமக்குக் கடுந்தண்டனைதான் தரவேண்டும்'' என்று மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு.டி.எஸ்.நிற்சிங்கா நேற்றுமாலை ஒரு ஆணையும் பெண்ணையும் தாக்கிக் காயம் விளைவித்த வழக்கில் எதிரியாகிய இளைஞனைக் குற்றவாளியாகக் கண்டு தண்டனை வழங்குவதற்காக எதிரியை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிடுகையில்குறிப்பிட்டார்.

இவ்வழக்கில் மயிலிட்டிக் கரையைச்சேர்ந்த சினிவாசகம் ஹரி அரிதாசன் என்பவர் அதே இடத்தைச்சேர்ந்தவர்களான கந்தப்பிள்ளை பொன்னம்மாவிற்கு பொல்லால் அடித்துப் படுகாயம் விளைவித்ததாகவும், அதே நேரத்தில் முருகுப்பிள்ளை வேலுப்பிள்ளையைப் பொல்லால் தாக்கிச் சிறுகாயம் விளைவித்ததாகவும் காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

கந்தப்பிள்ளை பொன்னம்மா, முருகுப்பிள்ளை வேலுப்பிள்ளை, சப்இன்ஸ்பெக்டர் இராசநாயகம்ஆகியோர் சாட்சியமளித்தபின், மாஜிஸ்டிரேட் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டார். இக்கட்டத்தில் இன்ஸ்பெக்டர் இராமநாதன் எதிரிக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்கள் இருப்பதாகக் கூறினார். மாஜிஸ்டிரேட் எதிரியின் கைவிரல் அடையாளங்களை எடுக்க உத்தரவிட்டு தீர்ப்பை இம்மாதம் 23ம் திகதிவரை ஒத்திவைத்து எதிரியை அத்திகதிவரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். காங்கேசன்துறைப் பொலிஸ்இன்ஸ்பெக்டர் திரு.பி. இராமநாதனின் உதவியுடன் வழக்கறிஞர் திரு.ரி. தம்பிரத்தினம் வழக்கை நடத்தினார். எதிர்தரப்பு வழக்கறிஞர்களான திருவாளர்கள் குமரகுரு, எஸ். நடராசா ஆகியோரின் அனுசரணையுடன் திரு. ஆர். கண்ணுத்துரை ஆஜரானார்.

# சமஷ்டிக்கு ஒருபோதும் சம்மதிக்கார்களாம்

## ஆங்கிலத் தினசரி அலறல்

யாழ்ப்பாணம், சனி

'வகுப்புவாத விரோதத்தையும் அமைதியின்மையையும் நாட்டில் ஏற்படுத்தக் கூடியவகையில் மந்திரி திரு. எம். திருச்செல்வம் தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சென்ற திங்கட்கிழமை பிரதமரை சந்தித்த சம்பவம் மிகவும் ஆச்சரிய மளிக்கக் கூடியதொன்றாகும்'' இவ்வாறு சுயாதீன பத்திரிகை பகுதியினரால் வெளியிடப்படும் ஆங்கில தினசரி 'சன்' தனது 15-ந் திகதிய ஆசிரியத் தலையங்கத்தில்தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- மந்திரிசபையில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவர் இக்குழுவில் சென்றதால் பிரதம மந்திரிக்கு எவ்வளவு சங்கடம் ஏற்பட்டிருக்கும். மந்திரிசபையில் அங்கம் வகித்த காலஞ் சென்ற எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா முன்னர் ஒரு முறை பிரதமராயிருந்த திரு. டி. எஸ். சேனநாயகா விடம் சிங்களமகா சபையின் சார்பில் ஒரு தூதுக்குழுவின் தலைவராகச்சென்றிருந்தார். ஆனால் அவர் மந்திரிப்பதவியிலிருந்துராஜினாமாசமர்ப்பிக்கு முன்னரே இப்படிச் செய்தார்.

தமிழரசுக் கட்சியினர் சைலொக்போல சிங்கள மக்களிடமிருந்து ஒருறாத்தல் தசையை மாத்திரம் கேட்கவில்லை. அவர்கள் அத்துடன் இரத்தத்தையும் எலும்புகளையும் கேட்கின்றனர். தற்பொழுது ஐக்கிய தேசியக்கட்சி சுதந்திரக்கட்சியுடன் மூன்று இடைத்தேர்தலில் போட்டியிடுகின்றது. சுதந்திரக்கட்சி மார்க்ஸிய வாதிகளுடன்கூட்டுச் சேர்ந்துள்ளது. ஐக்கியதேசியக் கட்சியின் தோல்வி, ஜனநாயக முறைக்கே பேராபத்தாகும்.

இச்சந்தர்ப்பத்தை உபயோகித்து ஆட்சியிலிருந்து விலகுவோமென்று எச்சரிக்கை செய்து வகுப்புவாதக் கோரிக்கைகளைச் சமர்ப்பிப்பது தமிழ் அரசுக் கட்சிக்கு ஏற்ற தொன்றா? எவ்வளவு சங்கடமான நிலையிலிருந்த போதிலும் சிங்கள மக்கள் தேசிய ஒற்றுமையை விரும்புகின்றனர். இவ் ஒற்றுமை எமது தாய் நாட்டில் எல்லா மக்களும் ஒன்றுசேர்ந்துபரஸ்பர நல்லெண்ணத்துடன் சரி சமமான முறையில். வாழவழிவகுக்க வேண்டும் சிங்கள மக்கள் சமஷ்டி முறைக்கு ஒருபோதும் உடன்பட மாட்டார்கள் இதனை எப்பொழுது தமிழரசுக்கட்சியினர் உணருகின்றனரோ அன்றுதான் எங்கள் எல்லோருக்கும் நன்மையுண்டாகும்.

---

## சுகாதாரக் கூட்டம்

வல்வெட்டித்துறை, சனி

அல்வாய் சுகாதார அலுவலகத்தில் சுகாதாரம் சம்பந்தமான மாதிரி கிராமம் அமைக்கும் முறைபற்றிய கூட்டமொன்று பருத்தித்துறை வைத்திய அதிகாரி திருமதி டாக்டர் அருளம்பலம் தலைமையில் நடைபெற்றது.

சுகாதாரக்கல்வி விரிவுரையாளர் திரு. எஸ். பொன்னம்பலம் சுகாதாரத் தொண்டர்களுக்குவிரிவுரை ஆற்றினார். திருவாளர்கள் எஸ். ச[illegible]முகம்பிள்ளை, வி. ஆறுமுக[illegible] திருமதி வள்ளிமுத்து ந[illegible]ராசா ஆகியோரும் கூட்[illegible]த்தில் பேசினர்.

---

## நவராத்திரி விழா

வல்வெட்டித்துறை, சனி

அல்வாய் முத்துமாரியம்மன் கோவிலில் நவராத்திரி விழா நேற்று ஆரம்பமாகியது. 23-ம் திகதிவரை சிறப்பாகக் கொண்டாடப் படவிருக்கிறது.

வல்லை சிதம்பராக் கல்லூரி சரஸ்வதி பூஜை இம்மாதம் 21,22,23 ந் திகதிகளில் நடைபெறும். இந் நாட்களில் பள்ளி மாணவர்களின் நடனமும், நாட்டியங்களும் இடம்பெற விருக்கின்றன.

உடுப்பிட்டி அமெரிக்கன் பாடசாலையில் நவராத்திரி விழா வருகிற 21ந்-திகதி தொடக்கம் 23: ந் திகதி வரை நடைபெற விருக்கின்றது.

---

# 'நாயைக் கொண்டு கடிப்பித்து காயம் விளைவித்தார்'

மாவிட்டபுரம், சனி

''எதிரி எனது சகலன். அவர் எனக்கு அடிக்க வந்ததுமல்லாமல், கட்டி வைத்திருந்த நாயை அவிழ்த்துவிட்டு அதைக் கொண்டுஎன்னைக் கடிப்பித்து காயம்விளைவித்துள்ளார்'' என்றுஇன்று மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்கொன்றில் சாட்சியமளித்த இளைப்பாறிய பி. டபிள்யூ. டி. பிரதம லிகிதர் ஒருவர் கூறினார்.

இவ்வழக்கில் அச்சுவேலியைச் சேர்ந்தவரும் இளைப்பாறிய பி. டபிள்யூ. டி. பிரதம லிகிதருமான சியாள்பிள்ளை நீக்கிளஸ் என்பவரைச் சென்றவருடம் நவம்பர் மாதம் 11-ம் திகதி அதே இடத்தைச் சேர்ந்தவரும் கிளிநொச்சிப்பகுதி பி. டபிள்யூ. டி. ஓவசியருமான ஏ. எஸ். பஞ்சியாம்பிள்ளை என்பவர் பயமுறுத்தியதாகவும், வீட்டிற்குள் அத்துமீறிப் பிரவேசித்ததாகவும், பலாத்காரம் பாவித்ததாகவும் காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு.மி. குணரத்தினம் ஆஜரானார். பொலிஸ் தரப்பில் இன்ஸ்பெக்டர் திரு.பி. இராமநாதனின்உதவியுடன் வழக்கறிஞர் திரு. ஆர். செல்வரத்தினம் ஆஜரானார்.

சாட்சியை எதிரிதரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி தனக்கும் எதிரிக்கும் உள்ள பிரச்னை குறுக்கே கட்டிய சுவரை முகடுமட்டும்கட்டுவதா இல்லையா என்பதே என்றும், தான் 9 அடிஉயரத்திற்கு கட்டிவிட்டு மிகுதியைக் கட்டாமல் விட்டதாகவும் கூறினார்.

நீதிபதி சாட்சியை,'சுவரை மட்டும் கட்ட ஆயத்தமாக இருக்கிறீரா? என்று கேட்டதற்கு சாட்சி ஆம் என்றும் செலவில் அரைவாசியை எதிரி தரவேண்டுமென்றும் கூறினார். நீதிபதி எதிரியிடம் கேட்டபோது வழக்கறிஞரின் ஆலோசனையின் பேரில் எதிரி அரைவாசிச் செலவை ஏற்பதாகக் கூறினார், நீதிபதி, மிகுதிச் சுவரைக்கட்டி முடித்து முழுச் செலவுக்கும் பில் கொண்டுவர உத்தரவிட்டு வழக்கை அடுத்தமாதம் 10ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.




## கொழும்பு

### ஞாயிறு 16 - 10 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வளை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 படத்திலிருந்து.

இரவு 6-10 கிராமச் செய்திகள், 6-15 குரல்வளை, 6-45 பாட்டு, 7-15 நேயர்கடிதங்கள், 7-30 நாடகம் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பாட்டு, 10-00 மாதர் வேட்டலை.

## பொல்லால் தாக்கிய வழக்கு

யாழ்ப்பாணம், ஞாயிறு

கணவனும் மனைவியும், அவர்கள் வீதியில் வசிக்கும் மற்றொருவரை பொல்லால் தாக்கினார்களாம். கரையூர் பொலிசார் அவர்கள்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

இவ்வழக்கு நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் ராஜேந்திரா வீதியை சேர்ந்த ஜேம்ஸ் என்பவரை, அதே வீதியை சேர்ந்த இன்னாசிமுத்து ராஜேந்திரமும், அவரது மனைவி சந்தியாபிள்ளையும் பொல்லால் தாக்கினார்கள் என குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் புறக்டர் ஏ. அன்ரனி ஆஜரானார். வழக்காளி தரப்பில் பொலிஸாருடன் புறக்டர் வி நடராசா ஆஜரானார். மாஜிஸ்திரேட்விசாரணையை டிசம்பர் 27-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

## பிரயாணிகள் கஷ்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

முன்னறிவித்தலின்றி பஸ் சேவைகள் திடீரென ரத்து செய்வதால், வழக்கமாக செல்லும் பிரயாணிகள் மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

இதுபற்றி மீசாலை பிரயாணிகள் சங்கம், டிப்போ அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்திருக்கின்றது.

## இலங்கையில்:..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேரோ பேசுகையில் குறிப்பிட்டார்.

விழா ஆரம்பத்தில் நல்லூர்க்கந்தசுவாமி கோவிலிலிருந்து பௌத்த மக்கள் சார்பில் நந்தாராமநாயக்க தேரோவும், கத்தோலிக்க மக்கள்சார்பில் திரு. ஜே. எஸ். அழகையாவும், இந்து மதமக்கள் சார்பில் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதத்தம்பிரான் சுவாமிகளும், முஸ்லிம்மக்கள்சார்பில் காதி.எம். எம். சுல்தானும் ஊர்வலமாக மேள வாத்தியங்களுடன் விழா அரங்கிற்கு அழைத்துவரப்பட்டனர்.

விழா இறுதியில் இயக்க இணைச்செயலாளர் திரு. சி. திருச்செல்வம் நன்றிதெரிவித்துப்பேசினார்.

---

சுழிபுரம், சனி

பண்ணாகம் தெற்கு ஸ்ரீ முருகன் சனசமூகநிலைய மண்டபத்தில் நவராத்திரி விழா நேற்று ஆரம்பமானது தொடர்ந்து ஒன்பது நாட்களும் நவராத்திரி மகிமை சம்பந்தமான பேச்சுக்கள் இடம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன நடக்கிறது?

சேகரிப்பு: க. கணேஷ்

விந்தையும் வியப்பும் திகைப்பும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் விநோதமும் வேடிக்கையும் நிறைந்த நிகழ்ச்சிகள் உலகின் ஒவ்வொரு மூலையில் நிமிடத்துக்கு நிமிடம் நடந்து கொண்டிருக்கின்றன. விஞ்ஞானம், விவசாயம், வைத்தியம், கைத்தொழில் இப்படி பல துறைகளில் புதிய சாதனைகள் நிலைநாட்டப்படுகின்றன. கற்பனையாவும் கனவாகவும் இருந்த பல விஷயங்கள் இன்று நாம் காணக்கூடியதாக சாதிக்கப்படுகின்றன. இது சம்பந்தமாக 'என்ன நடக்கிறது' என்று பார்ப்போமா? ....

## நித்திரை செய்து கொண்டே படிக்கலாம்

### புதிய கருவி உதவி செய்கிறது

ஒருவர் நித்திரை செய்து கொண்டிருக்கும்போதே படிக்கக்கூடிய வகையில் அமைந்த ஒரு புதிய கருவியை ரஷ்ய விஞ்ஞானி ஐவோனிட் குப்றியனேவிச் என்பவர் கண்டுபிடித்துள்ளார்.

மனிதன் நித்திரை செய்து கொண்டிருக்கும்போது மூளையிலிருந்து அலைகள் கிளம்புகின்றன. அந்த அலைகள் மூலமாக அவனது சூழ்நிலைக்கேற்ப இந்த புதிய டேப்றெக்கோடர் போன்றிருக்கும் கருவி தெரிந்து கொண்டு ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய விஷயங்களை மூளையில் பதியவைக்கிறது.

'மூளையிலிருந்து கிளம்பும் அலைகளே இந்தப் புதிய கருவியை இயக்கிவிடும்' என இந்த விஞ்ஞானி தெரிவிக்கிறார். இந்தப் புதிய கருவி பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

## சந்திரனிலிருந்து பார்த்தால்...

சந்திரனுக்கு மனிதன் செல்லும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அப்படி மனிதன் சென்று அங்கிருந்து உலகைப் பார்த்தால் அவன் என்ன காண்பான் என்பது இப்போது ஆராய்ச்சிமூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்திரனிலிருந்து பார்த்தால் பூமி சுழல் வதுவெகுதெளிவாகத்தெரியும். வானம்கருமையாகத் தெரியும். சூரியன் பூமியிலிருந்து பார்ப்பதைவிட மேலும் பிரகாசமாகத் தெரியும்.

உலகம் மங்கலான நீல நிறத்தில் தெரியுமென்றும் சுழற்சியின்போது சமுத்திரங்கள் சுழல்வதும் தெரியுமென்றும் கூறப்பட்டுள்ளது. உலகில் [illegible]யல் எங்கு எப்படி உருவாகின்றது என்[illegible]தைக்கூட சந்திரனிலிருந்து பார்க்கலாமாம்.

## பார்வை இழந்தவருக்கு மலர்த் தோட்டம்

பார்வையில்லாதோருக்கு இயற்கையின் எழிலை ரசிக்கச் செய்ய மேற்கு ஜெர்மனியில் புதுமையான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ஹாம்பர்க் அருகே கண் தெரியாதவர்களுக்காக ஒரு மலர்த்தோட்டம் இருக்கிறது. ஒவ்வொரு செடியின் அருகேயும் பெயர்ப்பலகையில், 'பிரெய்லி' என்ற பார்வையற்றவர்கள் விளங்கிக்கொள்ளும் எழுத்தில் செடியின் பெயர் எழுதப்பட்டிருக்கும். இதைக்கொண்டு ஒவ்வொரு செடியும் எப்படி, எப்படிப்பட்டது? அதில் மலரும் மலர்கள் எவ்வித மணம் வாய்ந்தவை என்பதை கண் தெரியாதவர்கள் நன்கு தெரிந்து கொள்கிறார்கள்.

## மனைவியுடன் சதா சண்டை போடாதீர்

### புற்றுநோய் இதனால் வரலாம்

ஒருவர் தனது கவலைகளைப் பிறருக்கு வெளியிடாமல் தனக்குள்ளேயே வைத்து வைத்துக்குமைந்துகொண்டிருப்பதால் சில சமயங்களில் புற்றுநோய் வரலாம் என சிளாஸ்கோவிலுள்ள வைத்திய ஆராய்ச்சி நிலையத் தலைவர் டாக்டர் டேவிட்கிஸன் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

தமக்கு 15 வயது வருவதற்கு முன்னர் பெற்றோர்களை இழந்தவர்களும் இத்தகையநோயால் பீடிக்கப்படுவார்களென்றும், தமது மனைவிமார்களோடு சதா சண்டை பிடித்துக் கொண்டிருப்பவர்களுக்கும் இந்த நோய் வரலாமெனவும்டாக்டர் கிஸன் கூறியுள்ளார்.

## குரலினால் இயங்கும் நாற்காலி!

நஞ்சுச்சத்து அடங்கிய தூக்க மாத்திரையைச் சாப்பிட்ட கர்ப்பிணிகளுக்கு, கைகால் 'வழங்காதவண்ணம்' அங்கவீனக் குழந்தைகள் பிறந்திருக்கின்றன. இவ்வித குழந்தைகள் அமர்ந்த ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குச் செல்லக் கூடிய புதுமையான உருளை நாற்காலிகள் மேற்குஜெர்மனியில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இக் குழந்தைகளின் குரலுக்கு ஏற்ப நாற்காலி முன்புறமாகவும் பின்புறமாகவும் வலது, இடதுபுறமாகவும் செல்லும். சக்கரக் குரல்மூலம் இயக்கும் விசை இந்த நாற்காலியில் பொருத்தப்பட்டிருக்கிறது.

## அணுசக்தி மூலம் மின்சக்தி

○ அணுவை மனித வாழ்வின் நலனுக்கு நன்கு பயன்படுத்தலாமென்பதில் நம்பிக்கை இப்போது அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஆராய்ச்சியாளரின் புதிய ஆராய்ச்சிகள் நம்பிக்கையை வலுப்படுத்துகின்றன.

ஸ்கொட் லாந்திலும் டவ்ரீயிலும் கட்டப்பட்டுவரும் நிலையங்கள் 1971ம் ஆண்டளவில் மின்சக்தியை அணுவிலிருந்து உற்பத்தியாக்க ஆரம்பித்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது இதன் பின்னர் இந்த நிலையங்கள் பிரிட்டிஷ் கைத் தொழில்களுக்கு 250 மெகாவாட்ஸ் மின்சக்தி விநியோகிக்கும்.

## எலி பிடிக்கும் வேலையில் பெண்!

தென் அத்லாண்டிக் தீவு ஒன்றுக்கு பிரிட்டனைச் சேர்ந்த பெண் ஒருவர் இன்னும் இரு மாதங்களில் செல்லவிருக்கிறார். இவர் மேற்கொண்டுள்ள வேலை எலி பிடிப்பது. ட்றிஸ் தான்டாகுனா என்ற இந்த தீவுக்கு இவர் துணிந்து செல்கிறார் என்று தான் கூறவேண்டும். காரணம் இந்தத் தீவில் ஆட்கள் யாரும் இல்லை. 35 வயதுடைய செல்வி எலீன் டெய்லர் இந்த வேலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது பற்றிக் கூறுவதாவது:

"இது பெண்களால் செய்யக்கூடிய ஒரு வேலை என்பதாலேயே என்னை இதற்குத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். நான் பிரிட்டனில் இருக்கும்போது இந்த வேலையை நிறம்பட செய்து வந்துள்ளேன்".

## முத்தமிட்டால் சிறைத்தண்டனை!

○ அவுஸ்திரேலியாவிலுள்ள பாம்தீவு என்னுமிடத்தில் வெள்ளையர் இனத்தைச் சேராத பெண் ஒருவர் வெள்ளைக்காரர் ஒருவரை முத்தமிடுவது கண்டுபிடிக்கப்பட்டால் 6 வார சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டியிருக்கும்.

## சத்திர சிகிச்சை மூலம் பேசவைத்தார்!

புதுடில்லி, ஜி. பி. பந்த் ஆஸ்பத்திரியில் சமீபத்தில் டாக்டர் ஜோகிந்தர் என். பாயனு ஒரு அபூர்வமான சத்திரசிகிச்சை செய்துபேச முடியாமலிருந்த நோயாளியைப் பேசவைத்துள்ளார்.

36 வயதேயான டாக்டர் பாயனு, 65 வயதான ஒரு நோயாளியின் இரத்தக் குழாய் ஒன்றை அடைத்துக் கொண்டிருந்த ஒரு தடுப்பை வெற்றியுடன் அறுவை மருத்துவம் மூலம் நீக்கினார். இந்த அடைப்பினால் நோயாளி உடலின் வலப்புறம் செயலற்றுப் போனதுமின்றி பேச்சு ஆற்றலும் பாதிக்கப்பட்டிருந்தது.

சத்திர சிகிச்சைசெய்து முடிக்க 80 நிமிடங்கள் ஆகின. மறுநாளேநோயாளி பேசத்தொடங்கினார். விரைவில் அவர் தம்கையையும் காலையும் இயக்க முடிந்தது.

## நதிகளின் அடித்தளத்தில் நிலக்கரி கண்டுபிடிப்பு

இரு பெரும் நதிகளின் அடித்தளத்தில் 35 கோடி தொன் நிலக்கரி இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்தக்கரியைத் தோண்டி எடுப்பதற்காக ஆறுகளின் நீரோட்டத்தையே வேறு திசையில் வெற்றிகரமாகத் திருப்பிவிட்டனர். ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் தான் இச் சாதனையைச் செய்திருக்கின்றனர்.

அணைகளையும், பாலங்களையும், பாதைகளையும் அமைத்து படுவேகத்தில் பாய்ந்து வரும் தண்ணீரின் ஓட்டத்தை வேறு திசையிற் திருப்புவதற்காக அவர்கள் பல ஆண்டுகள் பாடுபட்டனர்.

## தாடி 'மேக்கப்'

### இளைஞரின் புதிய மோகம்

○ ஆஸ்திரேலியாவில் இப்போது இளைஞர் போலித்தாடி அணிந்து கொள்வதை ஒரு பாஷனாக் கருதுகிறார்கள். இதில் பலர் மோகம் கொண்டுள்ளார்களென்பது அவர்களது முகங்களைப் பார்த்து அறியக்கூடியதாக இருக்கிறது. இந்தத் தாடி யுவதிகளின் தலைமயிரைக்கொண்டு தயாரிக்கப்படுகிறது.

## றேடியோவின் உதவியால்

### ஹெலிகொப்டர் பறக்கிறது

○ றேடியோ அலைகள் மூலமாகப் பெறப்படும் ஒருவகை சக்திமின்சார சக்தியாக்கப்பட்டு இதன் மூலம் ஹெலிகொப்டர் வானத்தில் பறப்பதற்கு வகை செய்துள்ளார்கள் அமெரிக்க விஞ்ஞானிகள். இந்தப்புதிய சக்திஹெலிகொப்டரின்காற்றாடிகளை வேகமாச் சுழற்றிவிட உதவுகிறது இதன் மூலம் ஹெலிகொப்டர் வானில் பறக்கிறது.

## கனவினால் உயிர் பிழைக்கின்றோம்

○ விலங்குகளும், மனிதர்களும் உயிர்பிழைத்து நிற்பதற்கு உதவும் வலுவான அம்சமாகக் கனவு இருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது.

பரிணாம வளர்ச்சிகளில் வெற்றிகரமாகப் பிழைத்து எஞ்சிவிட்ட விலங்கு இனங்கள் அனைத்தும் கனவு காணும் போக்குள்ளவையாகும் என்பது மேரிலாந்திலுள்ள மனநலனுக்கான தேசியக் கூடம் அண்மையில் நடத்திய ஓர் ஆராய்ச்சியிலிருந்து தெரிகிறது.

மனிதனைப் பொறுத்தவரையில் இன்று அவனுக்குள்ள மனச்சோர்வு, கவலை என்னும் உண்மையான ஆபத்திலிருந்து கனவு அவனைக் காப்பாற்றுகிறது. முற்றிலும் பாதுகாப்பாக இருப்பதாக உணரும் அமைதியானவர்களைவிட மேற்சொன்னவற்றால் வருந்துவோர் நீண்டநேரம் கனவு காணுகின்றனர்என ஆராய்ச்சி கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாணங்களுக்கிடையேயான கூடை பந்தாட்ட சுற்றுப்போட்டி முடிவுகள்

## சென். பற்றிக்ஸ். கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரிகளுக்கு கூடிய புள்ளிகள் கிடைக்கின்றன

யாழ்ப்பாணம், சனி

வடமாகாண விளையாட்டுக்கழகங்களுக்கிடையேயான ஒரு கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கோப்பாய் விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இச் சுற்றுப்போட்டியில் இதுவரை 5 போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளன. அவற்றின் முடிவுகள் பின்வருமாறு:

### கோப்பாய் கிறிஸ்ரியன் வெற்றி

கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரிக்கும், சென். பீற்றஸ் வெஸ்லி கழகத்துக்குமிடையே நடைபெற்ற மையான போட்டியின் பின்னர் கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரி, சென். பீற்றஸ் வெஸ்லி கழகத்தை தோற்கடித்தது, இப் போட்டியில் கிறிஸ்ரியன் கல்லூரி வீரரான தேவராஜசுந்தரம் 12 புள்ளிகளையும், சென். பீற்றஸ் வெஸ்லி வீரரான வி. தேவராசன் 8 புள்ளிகளையும் வெற்றிகரமாகப் பெற்றனர். இப் போட்டி முடிவில் கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரி 27—24 புள்ளிகளால் எதிர்க்கோஷ்டியை வெற்றியீட்டியது.

### சென். பற்றிக்ஸ் வெற்றி

சென். பற்றிக்ஸ் விளையாட்டுக்கழகத்திற்கும், சென். பீற்றஸ் வெஸ்லி கழகத்துக்கும் நடைபெற்ற கடுமையான போட்டியின் பின்னர் சென். பற்றிக்ஸ், சென். பீற்றஸ் வெஸ்லியைத் தோற்கடித்தது. இப் போட்டி ஆரம்பத்தில் இருந்து முடிவுவரையும் ரசிப்பாகக் காணப்பட்டது. சென். பற்றிக்ஸ் கோஷ்டியைச் சேர்ந்த எ. வை. சுவாம்பிள்ளையின் விளையாட்டு ரசிகர்களைப் பெரிதும் கவர்ந்தது. இவர் மொத்தம் 14 புள்ளிகளைப் பெற்றுக்கொடுத்தார். எதிர்க்கோஷ்டி வீரர்களான வி. தேவராஜனும், எஸ். அருளுணமும் அக் கோஷ்டிக்கு உயிர்நாடியாக விளங்கினர். சுறுசுறுப்பாகவும் விறுவிறுப்பாகவும் போட்டியிட்டனர். இதன் பலனாக இவர்கள் முறையே 7, 8 புள்ளிகளைப் பெற்றுக்கொடுத்தனர். இப்போட்டி முடியும் நேரத்தில் விளையாட்டுத்தரம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது, வெற்றிதோல்வி காணமுடியாத அளவுக்குப் போட்டியிட்டனர். கடைசியில் சென் பற்றிக்ஸ் விளையாட்டுக் கழகம் 31—30 புள்ளிகளால் எதிர்க்கோஷ்டியைத் தோற்கடித்தது.

### சென்பற்றிக்ஸ் வெற்றி

சென். பற்றிக்ஸ் கோஷ்டிக்கும் கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் சென். பற்றிக்ஸ், கிறிஸ்ரியன் கல்லூரியை வெகு சுலபமாகத் தோற்கடித்தது. இப்போட்டியின் ஆரம்பத்திலிருந்து முடிவுவரை விளையாட்டுத்தரம் சோபிக்கவில்லை. எனினும் சென். பற்றிக்ஸ் கோஷ்டி மிகவும் உற்சாகமாக விளையாடியது. இக் கோஷ்டியின் சிறந்த வீரர்களான எ வை சுவாம்பிள்ளையும், பி கனகசபையும் முறையே 16, 20 புள்ளிகளைப் பெற்றுக்கொடுத்தனர். கிறிஸ்ரியன் கல்லூரியின் சிறந்த வீரரான தேவராஜசுந்தரத்தின் விளையாட்டு ரசிக்கக்கூடியதாக இருந்தது. சிவா மொத்தம் 11 புள்ளிகளைப் பெற்றார். இளைய வீரனான வி. பாலகிருஷ்ணன் 7 புள்ளிகளைப் பெற்றார். இப் போட்டி முடிவில் சென்பற்றிக்ஸ் 48—28 புள்ளிகளால் கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரியைத் தோற்கடித்தது!

### கோப்பாய் வெற்றி

கோப்பாய் விளையாட்டுக் கழகத்துக்கும், சென். பீற்றஸ் வெஸ்லி கழகத்துக்குமிடையே நடைபெற்ற ஒரு ரசிப்பான போட்டியில் கோப்பாய் வெற்றியீட்டியது. இப் போட்டி இடைவேளைவரைக்கும் கடுமையான மோதலாகக் காணப்பட்டது. இடைவேளையின் போது கோப்பாய் 19 புள்ளிகளும், சென். பீற்றஸ் 18 புள்ளிகளும் பெற்றிருந்தன. இடைவேளையின் பின்னர் நடந்த போட்டியில் கோப்பாய் வீரர்கள் ஒரு புது உற்சாகத்துடன் கடுமையாக மோதி அடுத்தடுத்து கூடையில் பந்தைப் போட்டனர். அவர்கள் புள்ளி எண்ணிக்கையும் உயர்ந்து கொண்டே போனது. இப் போட்டி முடிவில் கோப்பாய் விளையாட்டுக்கழகம் 33—22 புள்ளிகளால் எதிர்க் கோஷ்டியைத் தோற்கடித்தது.

### கோப்பாய் வெற்றி

சென். பற்றிக்ஸ் விளையாட்டுக்கழகத்துக்கும், கோப்பாய் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற ஒரு சுவையான போட்டியில் கோப்பாய் விளையாட்டுக்கழகம் சென். பற்றிக்ஸ் கோஷ்டியை சுலபமாக வெற்றியீட்டியது. இப் போட்டி ஆரம்பத்தில் இருந்து முடிவுவரையும் ரசிப்பாகக் காணப்பட்டது. சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் சிறந்த வீரர்களான கிறவுதர், பி. கனகசபை ஆகியோரின் போட்டி பாராட்டக்கூடியது. இவர்கள் முறையே 7, 6 புள்ளிகளைப் பெற்றனர். கோப்பாய்க் கோஷ்டியில் விக்னேஸ்வரலிங்கம் தவராசா ஆகியோரின் போட்டி ரசிக்கக் கூடியது. இவர்கள் முறையே 17, 16 புள்ளிகளைப் பெற்றுக்கொடுத்தனர். இப் போட்டி முடிவில் கோப்பாய் விளையாட்டுக்கழகம் 35—23 புள்ளிகளால் சென். பற்றிக்ஸ் கோஷ்டியைத் தோற்கடித்தது. இப் போட்டிகள் யாவும் யாழ், மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

உதைபந்தாட்டம

# தெல்லிப்பழை யூனியனிடம் மத்தியகல்லூரி (2-ம்பிரிவு)தோல்வி

## ஆனல் மூன்ரும் பிரிவில் வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் 2-ம், 3-ம் பிரிவுகளின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 3-ம் பிரிவில் யாழ் மத்திய கல்லூரி தெல்லிப்பழை யூனியனைத் தோற்கடித்தது. முதலில் நடைபெற்ற இப்போட்டி ஆரம்பத்திலேயே விறுவிறுப்பாக காணப்பட்டது.

இரு சாராருமே விட்டுக்கொடுக்காமல் போட்டியிட்டனர். எனினும் மத்திய கல்லூரியின் முன்னணி வீரரான பீற்றர் போல் மின்னல் வேகத்தில் ஒரு கோலை அடித்தார் எதிர் கோஷ்டி இச் சந்தர்ப்பத்தில் பல கோல்கள் அடிக்கும் சந்தர்ப்பங்களை தவறவிட்டது குறிப்பிடத்தக்கது. இடைவேளையின் போது மத்திய கல்லூரி ஒரு கோல் பெற்றிருந்தது. இடைவேளைக்குப்பின் போட்டியின் தரம் உச்சக் கட்டத்தை அடைந்திருந்தது. இப் பலப்பரீட்சையினை முடிவுவரையும் ஒருவரும் கோல்கள் போடவில்லை. இப்போட்டி முடிவில் மத்திய கல்லூரி 1—0 கோலால் தெல்லிப்பளை யூனியனைத் தோற்கடித்தது.

### 2-ம் பிரிவில் யூனியன் வெற்றியீட்டியது

இதையடுத்து யூனியனுக்கும் மத்திய கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற 2-ம பிரிவுப் போட்டியில் யூனியன் கல்லூரி மத்திய கல்லூரியைத் தோற்கடித்தது இப்போட்டி ஆரம்பத்தில் சுவையாக இல்லாதபோதும் முடிவில் காரசாரமாகக் காணப்பட்டது. இரு சாராருக்கும் கோல்கள் போடும் சந்தர்ப்பங்கள் தாராளமாக கிடைத்தன. ஆனால் மத்திய கல்லூரி நேரத்தில் யூனியன் அவற்றை பயன்படுத்தி அடுத்தடுத்து 3 கோல்கள் போட்டன. இடைவேளைக்கு முன் மத்திய கல்லூரி ஒரு கோலும் போடாத வகையில் யூனியன் 3 கோல்கள் பெற்றிருந்தது. இடைவேளைக்குப் பின் மத்திய கல்லூரியிடம் ஒரு புது உற்சாகம் காணப்பட்டது. எதிர் கோஷ்டியுடன் பலமாக மோதியது. இச்சந்தர்ப்பத்தில் இருசாராருமே விட்டுக் கொடுக்காமல் போட்டியிட்ட காரணத்தினுல் எவருமே கோல்கள் போடவில்லை. இப் போட்டி முடிவில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி 3—0 கோல்களால் யாழ் மத்திய கல்லூரியைத் தோற்கடித்தது. இப்போட்டிகள் யாவும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

### உதைபந்தாட்ட மோதல்

பண்டைத்தரிப்பு, சனி

உதைபந்தாட்ட ரசிகர்கள் வெகு ஆவலோடு எதிர்பார்த்திருந்த ஒரு உதைபந்தாட்ட 'மோதலி'லிருந்து இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக் கோஷ்டியும் இம் மாதம் 21-ல் சென் பற்றிக்ஸ் விளையாட்டரங்கில் மோதிக்கொள்கின்றன.

### தொண்டமானுற்றல் சங்கியன் கழகம் வெற்றி

சுழிபுரம், வெள்ளி

சங்கிலியன் கழகக் கோஷ்டிக்கும், [illegible] கோஷ்டிக்கும் சிநேகபூர்வமாக நடைபெற்ற உதைப்பந்தாட்டப் போட்டியில் சங்கிலியன் கழகம் 1-0 போட்டு வெற்றிபெற்றது பண்டத்தரிப்பு விளையாட்டுக்கழகத்திடலில் போட்டி நடைபெற்றது.

# சிலரின் திருப்திக்காக சுகர்ணேவை விசாரிக்கலாமா?

## டாக்டர் ஆடம்மாலிக் கேட்கிருர்

ஹாங்காங், அக். 15

"அரசாங்கத்தைக் கவிழ்க்கச் செய்த சதியில் அதிபர் சுகார்ணோவுக்கு பங்குண்டு என்ற குற்றச்சாட்டுக்கு ஆதாரமில்லையே!" என்று இந்தோனேஷிய வெளியுறவு மந்திரி டாக்டர் ஆதம் மாலிக் இங்கு சொன்னார்.

கடந்த அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்ததாக முன்னுள் இந்தோனேஷிய வெளியுறவு மந்திரி திரு. சுபாந்திரியோ மீது குற்றஞ்சாட்டி தொடரப்பட்டுள்ள வழக்குச் சம்பந்தமாக டாக்டர் ஆதம் மாலிக் கூறினுர்.

"போதியளவு சாட்சியமில்லாமல் ஒரு சிலரைத் திருப்தி செய்வதற்காக டாக்டர் சுகார்ணோவை விசாரிக்கலாமா?" என்று மாலிக் கேட்டார்.

"டாக்டர் சுகர்ணோ எவ்வளவு காலம் வேண்டுமானுலும் பதவியிலிருக்கலாம். ஆனுல் மக்கள் பிரதிநிதித்துவ சபை அவருக்கு அளித்துள்ள அதிகாரத்தின் கீழ், தமக்குள்ள பொறுப்புகளை அவர் நிறைவேற்ற வேண்டும்" என்றும் அவர் கூறினுர்.

# 'வேலையில்லாததால் உயிரை மாய்க்கிறேன்'

## இளைஞனின் இறுதிக்கடிதம்

சங்கானை, சனி

"தமிழ்மணத்துடன் தமிழ் மண்ணிலே தற்கொலை செய்கிறேன். வேலையில்லாத்திண்டாட்டத்தின் காரணமாக எனது உயிரை மாய்க்கிறேன். தோன்றில் புகழுடன் தோன்றுக அஃதிலார் தோன்றலில் தோன்ருமை நன்று எனது மரணத்திற்கு ஒருவரும் பொறுப்பாளி அல்ல" என கடிதமொன்றை சின்னத்துரை இராசலிங்கம் (வயது 24) என்ற இளைஞர் எழுதிக் கிணற்றுக் கட்டிலவைத்து விட்டுக்கிணற்றில் வீழ்ந்து உயிரை மாய்த்துக் கொண்ட பரிதாப சம்பவம் சங்கானை மேற்கு வடலியடைப்பில் நிகழ்ந்துள்ளது.

வெளியில் சென்ற மகன் வீடுதிரும்பாததால் உறவினர்ஒருவருடன் தந்தை மகனைத்தேடி இறுதியில் மகனுடைய சடலத்தை கிணற்றில் கண்டார். பொலிஸிற்கு தகவல் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து சங்கானைப் பொலிஸ்இன்ஸ்பெக்டர் திரு. வி. செல்லையா விசாரணை நடத்தி சாட்சிகளை மரண விசாரணை அதிகாரி முன்ஆஜர்செய்தார். டாக்டர் எஸ். குலத்துக்கம் பிரேத பரிசோதனை நடத்தினுர். சாட்சியத்தைப் பதிவுசெய்த பின் மரண விசாரண அதிகாரி திரு. கே. சேனுதிராசா தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

### இறந்த பின்னும் இப்படி!

காங்கேசன்துறை, சனி

யாழ் அரசினர் ஆஸ்பத்திரி காவலாளர்களுக்கும் இறந்தவர் சடலங்களை எடுத்துச் செ...லும் தனிப்பட்ட பிரேத...ர்ச் சாரதிகளுக்கும் மி...டயில் ஒரு நிரந்தரத் தொடர்பு இருப்பதாகத் தெரியவருகிறது.

இது சம்பந்தமாகக் கூறப்படுவதாவது: ஆஸ்பத்திரியில் இரவுநேரங்களில் இறப்பவர்களுடைய சடலத்தை எடுப்பதில் சில நிர்வாக சிக்கல்கள் ஏற்படுவதாகவும் ஆஸ்பத்திரி விதி முறைகளை அறியாத மக்களை இரவில் வேலைசெய்யும் காவலாளிகள் குறிக்கப்பட்ட வான்கவில் சடலங்களை எடுத்துச் செல்லும்படியும் கூறுகின்றனராம். வாட்டில் ஒரு நோயாளி இறந்ததும் காவலாளிக்கு முதல் தகவல் தெரிந்துவிடுகின்றதென்றும் பகலில் இறந்தவர்களுடைய பிரேதங்களை பொதுமக்கள் எடுத்துச் செல்வதில் அவ்வளவு சிரமமில்லாததால், காவலாளிகள் இரவிலேயே வேலைசெய்ய விரும்புகின்றனரென்றும் சொல்லப்படுகிறது.

### அரசாங்கத்துக்கு வேர்ணன் பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

"பெருகிவரும் வேலையில்லாப்பிரச்சினையை ஓரளவு கட்டுப்படுத்தவும், உள்நாட்டுற்பத்தியைப் பெருக்கவும், அயல்நாட்டுச் செலவாணியைக் கட்டுப்படுத்தவும் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளில் இன்று இடத்துக்கிடம் அமைக்கப்பட்டிருக்கும் நெசவு நிலையங்களும் ஒன்று அப்படிப்பட்ட ஒரு நெசவுநிலையத்தைத்திறந்து வைப்பதில் நான் மிகவும், பெருமையும் அடைகிறேன்"

இவ்வாறு அரியாலை சனசமூகநிலையத்தின் ஆதரவில் உருவாக்கப்பட்ட கைத்தறி நெசவு நிலையமென்றைத் திறந்துவைத்துப் பேசியபோழ். அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா கூறினுர்

நல்லூர் எம். பி. டாக்டர் திரு. ஈ. எம் வி. நாகநாதனும் உரை நிகழ்த்தினுர்,

திரு. வி. சி. மாசிலாமணியின் உருவப்படம் காரியாதிகாரி திரு. எச். பிள்ளைநாயகம் திரைநீக்கம் செய்து வைத்தார்

### ஆனந்த குருகே உடுப்பிட்டி அ. மி. கல்லூரியில்

வல்வெட்டித்துறை, சனி

உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு இன்று காலை 8-மணிக்கு கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிக்காரியதரிசி டாக்டர் ஆனந்த குருகே விஜயம் செய்தார். கல்லூரியைச் சுற்றிப்பார்வையிட்டார்.

பார்வையிட்டபின் நடைபெற்ற வைபவத்தில் திரு. குருகே சொற்பொழிவாற்றுகையில் கூறியதாவது:-

பெண்பிள்ளைகள் முக்கியமாக கல்வியில் நாட்டம் கொள்ளவேண்டும். பெண்களால் தான் ஒரு சமுதாயச்சிறப்பாக இயங்க முடியும். இக் கல்லூரியின் வளர்ச்சியை அறிந்து மிகவும் சந்தோஷப்படுகிறேன். கல்லூரி வளர்ச்சிக்கு அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் ஒத்துழைப்புக் கொடுத்து வருகிறுர்கள் என்பதை வளர்ச்சியிலிருந்து அறியமுடிகிறது

பாடசாலை மாணவிகளால் கும்மி கோலாட்டம் முதலியனவும் நடைபெற்றன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் முக்கிய தேவை நிறைவேற்றப்படவில்லை

## சுழிபுரத்தில் எட்மன்ட்சமரக்கொடி

சுழிபுரம், சனி

"இந்நாட்டில் வாழும் தமிழ்பேசும் மக்கள் கடினமான பாதையில் சென்றுகொண்டிருக்கிறார்கள். கடந்தகால அரசாங்கங்களும், இன்றைய அரசாங்கமும் தமிழ்பேசும் மக்களுக்கு எவ்வித நன்மையும் செய்யவில்லை. இந்நேரத்தில் தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகளை எவ்வாறு தீர்க்கலாம் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். பல பெரும் பிரச்னைகளை தீர்க்கமுடியாத இன்றையஅரசாங்கம் தமிழ் பேசும் மக்களுக்கு விமோசனப் பாதையைக் காட்டும் எனத் தமிழ்பேசும் மக்கள் எதிர் பார்ப்பார்களேயானால் அது ஒரு பெரும் ஏமாற்றமாகவே இருக்கமுடியும்'' எனப் புரட்சிவாத சமசமாஜக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. எட்மண்ட் சமரக்கொடி வழக்கம்பரை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற மகிரங்கச் சொற்பொழிவில் குறிப்பிட்டார்.

கூட்டத்துக்கு திரு. என். அருணாசலம் தலைமைவகித்தார்.

சமரக்கொடி தொடர்ந்து மேலும் பேசுகையில் தமிழ் பேசும் மக்களின் பெரும்பான்மைப் பிரதிநிதிகளாகச் சென்ற தமிழரசுக்கட்சியினர் கடந்த காலங்களில் நடந்து கொண்டதுபோல் அல்லாமல் குறைந்தபட்ச கோரிக்கைகள், சுற்றுநிருபங்கள் சிலவற்றை ஏற்றுக் கொண்டனர். இதனால் பல நன்மைகளை எதிர்பார்த்து ஏமாந்துள்ளனர். பிரிவினையைக் காட்டுவதன் மூலமே ஆட்சியை நடத்தலாமென அரசாங்கம் எண்ணுகிறது. தமிழ்பேசும் மக்களின் முக்கிய தேவைகள் நிறைவேற்றப்படவில்லை. தோட்டத் தொழிலாளர்களின் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை. தமிழ்பேசும் மக்களின் மொழிப்பிரச்னையும் தீர்க்கப்படவில்லை. ஆகையால் தொழிலாளர் அரசாங்கம் அமைப்பதன் மூலமே நாங்கள் சுபீட்சமாக வாழலாம்.

---

## ரசாயன நிலையத்தில் வெடிப்பு

மொன்ட்ரீல், அக்15

இங்குள்ள ரசாயனப் பரிசோதனை நிலையமொன்றில் ஏற்பட்ட வெடிப்பின் விளைவாக நால்வர் மாண்டனர். 10பேர் காயமடைந்தனர். (பி. டி. ஐ.)

## நோயாளர் தரையில்

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் நோயாளர் கட்டிலின்றி தரையில் படுக்கிறார்கள் சிலசமயம் இங்கு வேலைசெய்யும் மின்சார இயந்திரக் கோளாறு காரணமாக நோயாளருக்கு வெளிச்சமும் தண்ணீர் வசதியும் இன்றிக் கஷ்டப்படுகிறார்கள். தினமும் இங்கு சிகிச்சை பெறவரும் வெளி நோயாளர்கள் இருப்பதற்கு இடவசதியும் இருப்பிட வசதியும் இன்றிக் கஷ்டப் படுகின்றனர். பெரும்பாலும் பெண்கள் அதுவும் பிரசவ மாதர்கள் நின்ற நிலையில்தான் மருந்து வழங்கப்படும் நேரம்வரையும் காத்து நிற்கவேண்டியிருக்கிறது. விபரம் தெரியாத சில நோயாளர் வந்து மணித்தியாலக் கணக்கில் காத்து நிற்கின்றனர். அத்துடன் இவ்வாஸ்பத்திரியில் நோயாளருக்குத் தேவையான மருந்துகளுமின்றி நோயாளர் கஷ்டப்படுகின்றனர்.

## வயோதிபமாது விளக்குக்குப் பலி

பரந்தன், சனி

ஆனையிறவைச் சேர்ந்த தட்டுவங்கொட்டி வாசியான கந்தர் கைம்பெண் குஞ்சுப்பிள்ளை வயது 60, கையில் மண்ணெண்ணை விளக்குடன் ஒரு வீட்டுக்குள் இருந்து இன்னொரு வீட்டுக்குப் போகும்போது மயங்கிக் கீழே விழுந்ததால் பலத்த எரிகாயங்களுக்குள்ளாகிக் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர் அங்கு காலமானார். இவ்வித மயக்கம் அவருக்குத் தொடர்ந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

---

## கொலை செய்ய முயன்றதாக வழக்கு

மாவிட்டபுரம், சனி

பலாலியைச் சேர்ந்தவர்களான லூக்கஸ் அந்தோனிப்பிள்ளை, லூக்கஸ் மிக்கேல்பிள்ளை ஆகிய இருவரும் சென்ற மாதம் 17-ம் திகதி அதேயிடத்தைச் சேர்ந்த மத்தியூஸ் அந்தோனிப் பிள்ளையை றிவோல்வரால் சுட்டுக் கொல்ல முயன்றதாகவும் அதே நேரத்தில் இரண்டாம் எதிரியாகிய மிக்கேல்பிள்ளை என்பவர் மத்தியஸ்மேரி, மத்தியஸ் அந்தோனிப்பிள்ளை ஆகிய இருவரையும் வில்லுக்கத்தியால் குத்தி அவர்களுக்குக் காயம் விளைவித்ததாகக் காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்று மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். திற்சில்வா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாஜிஸ்ரேட் எதிரிகளுக்கு குற்றச்சாட்டை வாசித்துக் காட்டியபின் வழக்கை விசாரணைக்காக இம்மாதம் 30-ந் திகதிவரை ஒத்திவைத்து எதிரிகளை பழையபிணையில் செல்லும்படி உத்தரவிட்டார். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரெத்தினம் ஆஜரானார் பொலிஸ் தரப்பில் இன்ஸ்பெக்டர் திரு. இராமநாதன் ஆஜராகியிருந்தார்.

## துணுக்காய்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்துவிடலாமென்று கூறியதாகவும், அதற்கு தண்டப்பண மில்லையென முனியாண்டி கூறியதாகவும். இதைத்தொடர்ந்தே அநாமதேயக்கடிதம் எழுதி முனியாண்டியை பிடிக்கச்செய்ததாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

# தொடம்பே முதலாளி மரண விசாரணை

கொழும்பு, வெள்ளி

தொடம்பே முதலாளியின் மரணம் சம்பந்தமாக பொலிஸ் இலாகாவின் விசேஷப் பிரிவினர் நடத்தியுள்ள புலன் விசாரணைகளில் அந்தமரணம் கைமோசக் கொலை என்பதற்கு சரியான ஆதாரம் கிடைக்கவில்லையென்று கருதப்படுகின்றது.

தொடம்பே முதலாளி என்பவர் சதிமுயற்சி விசாரணைகளின்போது பொலிஸ் தலைமைக்காரியாலய கட்டடத்திலிருந்து விழுந்துமாண்டார். இவர் மரணம் முதலில் தற்கொலையென்றும் பின்னர் கைமோசக்கொலையென்றும் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது. இரண்டாவதாக நடைபெற்ற மரண விசாரணைகளின்போது முக்கிய சாட்சியாக இருந்த சார்ஜண்ட் ஹொந்தமுனி இன்னும் பொலிசாருக்கு வாக்குமூலம் கொடுக்கவில்லையென்றும் இவர் வாக்குமூலம் கொடுக்காத பட்சத்தில் கைமோசக் கொலையென்பதற்கு போதிய ஆதாரம் கிடைக்காமல் போகும் என்றும் பொலிஸ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பொலிசார் நடத்தியுள்ள விசாரணைகளின் முடிவுகள் விரைவில் கோட்டை நீதவான் முன் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## பதவியிலிருந்து விலகுவதில் தாமதித்ததற்கு காரணம்

### சிறிமா தந்த விளக்கம்

கொழும்பு, வெள்ளி

திருமதி பண்டாரநாயக்க இன்று அத்தனகல்ல தேர்தல் ஆட்சேபவழக்கில் சாட்சியமளித்தார். மனுதாரின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் கே. சி. நடராசா குறுக்குவிசாரணை செய்தார்.

1965ம் ஆண்டு தேர்தலின்பின்தாம் பிரதமமந்திரி பதவியிலிருந்து விலகாமல் தாமதித்ததற்கு எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை பலம் கிடைக்காமல் போனதுதான் காரணம் என்று அவர் கூறினார்.

ஐக்கியதேசியக்கட்சி பெரும்பான்மை கட்சியின் ஆதரவைபெற்றதும் தாம் பதவியை ராஜினாமா செய்ததாகவும், தமிழரசுக் கட்சியுடன் தாம் பேச்சுவார்த்தை நடாத்தவில்லையென்றும், கூட்டாட்சி உறுப்பினர்கள் சிலர்தான் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள் என்றும் கூறினார். தமிழரசுக்கட்சியினரும் தம்முடன் பேசவரவில்லையென்றும் அவர் கூறினார்.

## சிங்கள ஆசிரியர் பற்றி பிரதமர்

கொழும்பு, வெள்ளி

இன்றைய ஒப்சேர்வர் பத்திரிகையில் வடக்குக்கு அதிக சிங்கள ஆசிரியர்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள ஒரு செய்தியில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

கல்தோட்டை என்ற இடத்தில் நடைபெற்ற ஒரு தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் நேற்றுப் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா பேசும் போது வடக்குக்குச் சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்பட்டுள்ளார்கள். மேலும் அதிக சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்படுவார்கள் என்று கூறினார்.

இதில் வேடிக்கையென்னவென்றால் வடக்குக்குத் தாமே போகமுடியாமல் இருப்பவர்கள் வடக்குக்குச் சிங்கள ஆசிரியர்களை அனுப்புவது பற்றிப் பேசுகிறார்கள் என்று அவர் மேலும் கூறினார்.

பலாங்கொடை தொகுதிக்குப்போட்டியிடும் திரு அபுசாலியை ஆதரிப்பதற்காக இக்கூட்டம் நடைபெற்றது.

## கிராமசேவையாளர் இடமாற்றம்

பரந்தன், சனி

அக்கராயன் குளம் கிராம சேவையாளராகக் கடமையாற்றிய திரு. எஸ். சொக்கலிங்கம் இராமநாதபுரம் கிராம சேவையாளராகவும் இராமநாதபுரம் கிராமசேவையாளராகக் கடமையாற்றிய திரு. வி. காரானபிள்ளை அக்கரையான்குளம் கிராம சேவையாளராகவும் அண்மையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## இணுவில் ஆஸ்பத்திரி வேலை நிறுத்தம்

கோண்டாவில், வெள்ளி

இணுவில் மக்கிலியட் ஆஸ்பத்திரி வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது. இன்று காலை வட இலங்கை பிரத்தியேக ஆஸ்பத்திரி ஊழியர்சங்கத் தலைவர் திரு. சாமுவேலுக்கு வேலை நீக்க நோட்டீஸ் ஆஸ்பத்திரி சுப்பிரின்டனால் வழங்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## தசாகக்கிரியை அழைப்பு

காலஞ்சென்ற பிரமஸ்ரீ ச. பஞ்சாட்சரஐயர் அவர்களின் மருமகனும் திருமதி இந்திராட்சி அம்மாளின் அன்புக்கணவரும் சாயத்திரி, சோமாஸ்கந்தன், பாலசண்முகன், சுகந்தி, பத்மநாபன், கல்யாணி, ஹேமமாலினி ஆகியோரின் அருமைத்தந்தையும், வல்லிபுர ஆழ்வார் ஆலய பூசகர் கணபதிசாமிக்குருக்கள், சபாரத்தினக்குருக்கள் ஆகியோரின் சகோதரரும், ப. வித்தியானந்தசர்மா (வித்தியாசந்தோர் யாழ்ப்பாணம்), ப. சுவாமிநாதசர்மா (உப அதிபர், இந்துக்கல்லூரி, உரும்பிராய்) ஆகியவர்களின் மைத்துனருமாகிய காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ ச. சின்னஸ்வாமிசர்மா அவர்களின் தசாகக்கிரியை பராபவவருடம் ஐப்பசிமாதம்2ம் திகதி செவ்வாய்க்கிழமை (18-10-66) நடைபெறும். நண்பர்களும் உறவினர்களும் இவ்வழைப்பை ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம் இங்ஙனம், நடைபெறும்இடம்: கிராமக்கோட்டடி, புலோலிகிழக்கு பருத்தித்துறை. 1426

---

யாழ். மத்திய

## விடுதிமாணவர் தினம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மத்திய கல்லூரியின் விடுதி மாணவர்கள் சமீபத்தில் தமது வருடாந்த விடுதி மாணவர் தினத்தைக் கொண்டாடினர். யாழ். மாநகரசபைக் கமிஷனர் திரு. கட்சன் செல்வராசா இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். மாணவர்கள் யாழ். பூங்காவின் ரேடியோ இரவு நேரங்களில் தங்கள் படிப்பைக் குழப்புவதாகவும் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர். இக் கொண்டாட்டத்தையொட்டிமாணவர்கள் விளையாட்டுப்போட்டிகளும் நடத்தினர்.

## 'விளக்கைப் போன்றவன் ஆசிரியன்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

"ஒரு ஆசிரியன் ஒருவிளக்கைப்போன்றவன். ஒருவிளக்கின் சுடர் எவ்வாறு ஏனைய விளக்குச்சுடர்களை தோற்றுவிப்பதற்குபயன்படுகிறதோ அவ்வாறு ஆற்றல் உள்ள ஆசிரியன் ஆற்றல் உள்ள மாணவர்களைத் தோற்றுவிக்கவேண்டும். அதுவே அவன் நாட்டுக்குச்செய்யும் சிறந்த சேவையாகும்.''

இவ்வாறு கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலயத்தில் தமக்கு அளிக்கப்பட்ட சேவைநலம்பாராட்டு விழாவில் பிரமஸ்ரீ ரி. எஸ் தியாகராசா கூறினார். திரு. பொ. ஏரம்பு திரு. தியாகராசாவின் சேவையைப் பாராட்டிப் பேசும்பொழுது அவரது உழைப்பில் உருவான கல்லூரிபிரார்த்தனை மண்டபமும், மணியும் என்றும் அவரது ஞாபகச் சின்னமாக விளங்கும் என்றார். மேலும் அதிபர். திரு. பரம்சிக்கநடராசா, திரு. வி. கி. நமசிவாயம், திரு. குருநாதபிள்ளை ஆகியோரும்பாராட்டிப்பேசினர்.

## மரண அறிவித்தல்

புங்குடுதீவு மேற்கு காலஞ்சென்ற ஆசிரியர் அருணாசலம் நல்லதம்பி. அவர்களின் அருமை மனைவியும், தம்பிராசா (கிராமசபை விகிதர்) தாமோதரம்பிள்ளை (மலாயா சுங்கஇலாகா) பசுபதிப்பிள்ளை (தலைமை ஆசிரியர் இருப்பிட்டி. அ. மி. பாடசாலை புங்குடுதீவு) பொன்னம்மா. தங்கம்மா இராசம்மா ஆகியோரின் அருமைத் தாயாரும். மலாயன் பென்சனியர் சி. சுப்பிரமணியம், இளைப்பாறிய தலைமையாசிரியர் க. ஏரம்பு காலஞ்சென்ற தலைமையாசிரியர் வே. செல்லத்தம்பி காமாட்சி, மகேஸ்வரி புவனேஸ்வரி (ஆசிரியை. வேம்படி மகளிர்கல்லூரி) ஆகியோரின் மாமியாருமாகிய வள்ளியம்மை காலம்சென்றுவிட்டார். தகனக்கிரியை 16-10-66 காலை 10 மணியளவில் மணல்காடு மயானத்தில் நடைபெறும்.

இதனை உற்றாரும் உறவினர்களும் அறிவித்தலாகக் கொள்ளவும்.

அறிவிப்பவர்:
ந. தம்பிராசா.

## இளவாலை வாசிக்கு ஆறுதல் பரிசு

பண்டத்தரிப்பு, சனி

சென்ற மாதம்29 .ந்திகதி தேசிய லொத்தர் சபையால் நடாத்தப் பெற்ற 109-வது சுவீப்பில் இளவாலை வாசியான திரு. கே. கனகரத்தினம் என்பவருக்கு 1415-ரூபா -80 சதம் கிடைத்துள்ளது.

---

## 25 ரூபா அபராதம்

வல்வெட்டித்துறை, சனி

எஸ். நடராசா என்பவர் தான் வைத்திருக்கும் வானுக்கு இலக்கத் தகடு எடுக்காமல் பாவித்து வந்தகுற்றத்திற்காக பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. ஹூபேர்ட் சில்வா வினால் 25 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org